பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 6 புதன்கிழமை (22-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:269

# தேசிய நல்லிணக்க அரசு குறித்துப் பேச வருமாறு ரணிலுக்குப் பிரதமர் அழைப்பு!

## அரசும், ஐ.தே.கவும் சேர்ந்து புலிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சு நடத்தவேண்டும் என்கிறார்



கொழும்பு,ஓக.22

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக உத்தியோகபூர்வ பேச்சுகளை நடத்துவதற்கு முன்வருமாறு பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் அரசும் சேர்ந்து விடுதலைப் புலிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என்றும் அந்த அழைப்புக் கடிதத்தில் பிரதமர் குறிப்பிட்டிருக்கின்றார்.

தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது குறித்துப் பேச வருமாறு அழைப்பு விடுத்து பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, ரணிலுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரு தரப்புக்குமிடையே (அரசு, ஐ.தே.கட்சி இடையே) உயர் மட்டப் பேச்சுகள் நடைபெற்ற பொழுதிலும் அவை பூர்த்தியடையவில்லை.

எனவே ஐ.தே.கட்சியுடன் அரசு, ஆக்கபூர்வமான இணக்கத்திற்கு வரக்கூடிய ஒரு சாதகமுள்ள நடவடிக்கையாக முறையான பேச்சுக்களில் ஈடுபட முன்வரவேண்டும்.

அரசும் ஐ.தே.கட்சியும் ஒரு நல்லிணக்க அரசை ஏற்படுத்த வேண்டுமானால் அவை இணக்கம் காணப்பட்ட செயல்திட்டம் ஒன்றை அங்கீகரிக்க வேண்டும்.

இந்த செயல்திட்டம் அரசைப் பொறுத்தவரையில் நாட்டினதும் நாட்டு மக்களினதும் நன்மைக்காக உருவாக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

இந்தத் தேசத்திற்கு மக்களின் தொடர்ச்சியான பொருளாதார, சமூக மேம்பாடு தலையாய முக்கியத்துவத்தைக் கொண்டதாக இருக்கவேண்டும்.



(2 ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறையில் பொலீஸ் நிலையத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தனர்!

## 22 பொலீஸார் பலி; மேலும் 7 பேரைக் காணவில்லை

மட்டக்களப்பு,ஓகஸ்ட்22

**அம்பாறை மாவட்டத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மத்திய முகாம் (சென்ட்ரல் காம்ப்) பொலீஸ் நிலையத்தை விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் இரவு தாக்கி நிர்மூலமாக்கினர்.**

**இந்தத் தாக்குதலில் இராணுவப் பயிற்சிபெற்ற 22 பொலீஸாரும் இரு பொதுமக்களும் கொல்லப்பட்டனர்; 20 பேர் காயமடைந்தனர்; ஏழு பேரைக் காணவில்லை.**

பொலீஸ் நிலையத்தைக் கைப்பற்றிய புலிகள், சில மணி நேரத்தின் பின்னர் அதனை அழித்துவிட்டு சென்றுள்ளதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டங்களின் எல்லையில் தென்மேற்காக 35 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மத்திய முகாம் பொலீஸ் நிலையம் அப்பகுதியில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்குப் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பொலீஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகளின் 'ஜெயந்தன் படையணி'யைச் சேர்ந்த போராளிகளே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் சிப்பாய் பலி!

வவுனியா,ஓக.22

வவுனியா ஓமந்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் உழவு இயந்திரத்தில் சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொரு சிப்பாய் காயம் அடைந்தார்.

சுபைர் என்ற சிப்பாயே உயிரிழந்ததாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (க-3)

### இரு புலிகள் உயிரிழப்பு

## கைப்பற்றிய ஆயுதங்கள், சடலங்கள் நேற்று பொதுமக்களின் பார்வைக்கு!

மட்டக்களப்பு,ஓக.22

அம்பாறை மத்திய பொலீஸ் நிலையம் மீது நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட தாக்குதலில் தமது தரப்பில் இரு போராளிகள் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மேஜர் கோகுலன் (நாகராசா நவநீதன் - அம்பாறை), பவித்திரன் (கோகிலநாயகம் கவிதாசன் - அம்பாறை) ஆகியோரே உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் 60 மி.மீ.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள, தமிழ்க் குடும்பங்கள் பெருமளவில் இடம்பெயர்வு

அம்பாறை மத்திய பொலீஸ் நிலையம் மீதான தாக்குதலை அடுத்து -

அந்தப் பகுதியில் உள்ள சிங்கள - தமிழ்க் குடும்பங்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து வருவதாகச் செய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் எல்லைப் பகுதிக் கிராமங்களில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள இந்த மக்கள் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து பாதுகாப்பான பகுதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறைத் தாக்குதலோடு 'ஈழப் போர் - 4' ஆரம்பம்?

கொழும்பு,ஓக.22

நேற்று முன்தினம் இரவு அம்பாறை மத்திய முகாம் பொலீஸ் நிலையம் மீது நடத்திய பெரும் தாக்குதலோடு நான்காவது ஈழப் போரை விடுதலைப் புலிகள் ஆரம்பித்துவிட்டதாக செய்தி ஏஜென்சி ஒன்று குறிப்பிட்டது.

கடந்த டிசெம்பர் கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தில் ஒரு தலைப்பட்சமாகத் தாம் அறிவித்த யுத்தநிறுத்தத்தோடு விடுதலைப் புலிகள் மூன்றாவது ஈழப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததாகக் கருதப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்களவருக்கு எதிராக நாம் போராடவில்லை அரசியல்வாதிகளே யுத்தம் நீடிக்கக் காரணம்

## தமிழ்ச்செல்வன் கூறியதாக நாணயக்கார தகவல்

கொழும்பு,ஓக.22

சிங்கள மக்களுக்கு எதிராகத் தமிழர்கள் போராடவில்லை என்றும் -

சுயநலவாத அரசியல்வாதிகளின் நிர்ப்பந்தம் காரணமாகவே தாங்கள் யுத்தம் புரிய நேரிட்டுள்ளது என்றும் -

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் எம்மிடம் தெரிவித்தார்.

காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் இப்படிக் கூறினர்.

வன்னியில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்தமை தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் நாணயக்கார கொழும்பில் நேற்று செய்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்கப்பட்ட சிறுமி முறைப்பாடு

மட்டக்களப்பு,ஓக.22

மட்டக்களப்பு நாவலடியில் உள்ள சிறுவர் இல்லத்தில் 16 வயதுடைய சிறுமி ஒருவர் அந்நிலையத்தின் பொறுப்பாளரால் மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டு மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மட்டக்களப்பு வைத்தியசாலை பொலீஸாரிடம் பாதிக்கப்பட்ட சிறுமி அளித்த வாக்குமூலத்தையடுத்து பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களின் நிதி உதவியுடன் நடத்தப்படும் இச்சிறுவர் இல்லத்தில் ஒன்பது பெண்கள் 13 ஆண்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் இந்த இல்லப் பொறுப்பாளர் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-21)

## 4 'கிபிர்' விமானங்கள் நேற்று பளைப் பகுதியில் குண்டுவீச்சு!

கொழும்பு,ஓக.22

குடாநாட்டில் பளையில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுக்காலை 10.45 மணியளவில் நான்கு 'கிபிர்' விமானங்கள் தாக்குதல்களை நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலினால் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட சேதம் குறித்துத் தெரியவில்லை என்றும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

அண்மைக் காலத்தில் யாழ். குடாநாட்டில் நடத்தப்பட்ட ஆறாவது தாக்குதல் இது என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (க-3-9)

## கோட்டை ரயில் நிலையம் முன் ஊடகவியலாளர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக.22

கட்டுநாயக்கா சீதுவைப் பகுதியில் 'மிக்' யுத்த விமானம் வீழ்ந்து நொறுங்கிய இடத்துக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற 'ஹிரு எவ்.எம்.' செய்தியாளர் உதய விஜேசிங்க விமானப்படை அதிகாரி ஒருவரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து -

நேற்றுப் பகல் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக மறியற் போராட்டம் இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# செப்ரெம்பர் 7 ஆம் திகதி இரவிரவாக நாடாளுமன்றில் இருக்க எதிரணி முடிவு

கொழும்பு,ஓக.22

தற்போது ஜனாதிபதியால் ஒத்தி வைக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றம் மீண்டும் செப்ரெம்பர் 7 ஆம் திகதி கூடும்போது, அன்று இரவிரவாக தொடர்ந்து நாடாளுமன்றத்தில் தங்கியிருக்க எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் முடிவு செய்திருக்கின்றனர்.

மீண்டும் இரண்டாவது தடவையாக - அன்றைய தினமே - மேலும் இரண்டு மாதங்களுக்கு நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைக்கலாம் என்று பேச்சடிபடுவதால் -

அத்தகைய நிலை ஒன்றை அரசியல் ரீதியாக எதிர்கொள்ளத் தயாராகவே எதிர்க்கட்சிகள் இப்படித் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

"மீண்டும் செப்ரெம்பர் 7 ஆம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தால் நாங்கள் நாடாளுமன்றத்தில் தங்கியிருந்து செயற்படத் தொடங்குவோம். அப்போது நாட்டில் அதிகாரம் இரண்டு மையங்களில் இருந்து செயற்படும் நிலை ஏற்படும். ஜனாதிபதி தனது தவறான செயற்பாட்டின் மூலம் அத்தகைய நிலையை ஏற்படுத்தவே வழி செய்வார் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படி நடக்குமானால் அப்போது முதல் நிறைவேற்று அதிகாரத்துக்கும் சட்டமியற்றும் சபைக்கும் இடையிலான மோதல் ஆரம்பித்து விடும். ஜனாதிபதி அதைத்தான் விரும்புகிறார் என்றால் நாம் அதற்குத் தயார்" - என்று நேற்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில விக்கிரமசிங்க தனிப்பட்ட பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அன்றிரவு நாடாளுமன்றத்தில் தங்கியிருக்க எதிர்க்கட்சித் தரப்பின் 115 எம்.பிக்களும் இணங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மீண்டும் நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கும் அறிவிப்பை விடுத்தால், அந்த அறிவிப்பை உதாசீனம் செய்து விட்டு, எதிர்க்கட்சிகள் உடனடியாகவே நாடாளுமன்ற நடவடிக்கைகளை இரவோடு இரவாக ஆரம்பிப்பர் என்று அவர்களது தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, அமைச்சர் மகிபால ஹேரத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, பிரதம நீதியரசருக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை, ஐந்து சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தல் போன்ற நடவடிக்கைகளை உடனடியாக எதிரணியினர் நாடாளுமன்றத்தில் மேற்கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# பொதுத் தேர்தலை உடன் நடத்தும் உத்தேசம் ஏதும் எனக்கு இல்லை

## அடித்துச் சொல்கிறார் ஜனாதிபதி

இன்றைய அரசியல் நெருக்கடியில் இருந்து மீள, நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்தும் உத்தேசம் எதுவும் இல்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் தான் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. அதில் என்னை மக்கள் வெற்றி பெறச் செய்தனர். அடுத்து பொதுத தேர்தல் நடந்தது. அதிலும் எமக்கே மக்கள் ஆணை தந்தார்கள். மீண்டும பொதுத்தேர்தல் ஒன்று எமக்குத் தேவையில்லை.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு இன்றோ, நாளையோ விழுநது விடாது. மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் அரசு தொடர்ந்து பதவியில் இருக்கும்.

நடந்து முடிந்த பத்துத் தேர்தல்களிலும் மக்கள் ஆதரவைப் பெற முடியாத ஐ.தே. கட்சி சதிமுயற்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முனைகிறது. ஆனால் இதில் வெற்றி கிடைக்காது - என்றார். (க-3)

## கல்விமாணி பாடநெறிக்கு நேர்முகப் பரீட்சை

தென்மராட்சி,ஓக.22

மகரகம தேசிய கல்வி நிறுவனத்தினரால் நடத்தப்படவுள்ள கல்விமாணி பாடநெறிக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 61 ஆசிரியர்கள் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (க-117)

# சரியாகச் சிந்திக்கத் தெரியாத 'கோமாளி' அமைச்சர்களின் அரசு!

## பரிகசிக்கிறார் பிரதி அமைச்சர் டலஸ்

கொழும்பு,ஓக.22

கோமாளிகள் நிறைந்த கூட்டமாக - சரியாக சிந்திக்கத் தெரியாத அமைச்சர்களின் அணியாக - அரசாங்கம் உள்ளது என்று விமர்சித்திருக்கின்றார் பிரதி அமைச்சர் டலஸ் அழகப்பெருமா.

அரசுக்குள் ஜனாதிபதிக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருக்கும் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்காவின் அணியைச் சேர்ந்தவர் இவர் என்பதும் -

ஸ்ரீ.ல.சு. கட்சியின் 28 பிரதி அமைச்சர்கள் திகதியிடப்படாத தமது இராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளித்தபோது, அந்த அணியில் இணையாமல் அதை விமர்சித்து வருபவர் என்பதும் - குறிப்பிடத்தக்கது.

"ஜனாதிபதியைக் காப்பாற்றுபவர்கள் போல வேடமிட்டு அவருக்கு முன்னால் வளைந்து நிற்கும் சிலர் ஜனாதிபதிக்கு தவறான ஆலோசனைகளைக் கூறுகின்றனர்.

"திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை ஒப்படைப்பதன் மூலம் ஜனாதிபதியை அவதூறுப்படுத்தும் செயலை நான் செய்யமாட்டேன். அதிலும் பார்க்க, சரியான திகதியைக் குறித்து இராஜினாமாக் கடிதத்தை ஒப்படைத்துவிட்டு வீட்டுக்குப்போய் வெற்றிலை விற்பனை செய்வேன்" - என்றும் பிரதிஅமைச்சர் டலஸ் அழகப்பெருமா தெரிவித்தார். (உ)

## குடி தண்ணீர் விநியோகம்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள எட்டு நலன்புரி நிலையங்களுக்கு பவுஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகப் பணியை சாவகச்சேரி நகர சபையினர் நேற்றுத் தொடக்கம் ஆரம்பித்துள்ளனர்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் குடிதண்ணீர் விநியோகப்பகுதி ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.(க-3)

# தேசிய நல்லிணக்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் முக்கியமான பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காணப்பட வேண்டும். அதன் வாயிலாக தற்போது நடந்துவரும் ஆயுத மோதலுக்கு முடிவு கட்டுவது அவசியமாகும். இதுதான் உடனடி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவேண்டும்.

ஐ.தே.கட்சியும் அரசும் சேர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களில் ஈடுபட வேண்டும். அதேசமயம் சிறுபான்மை மக்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்தக் கூடிய அரசமைப்பு ரீதியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அத்தோடு பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தை உரிய விதத்திலும், தன்மான முறையிலும் பிரதிபலிக்கக் கூடிய வகையில் தேர்தல் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அதேவேளை சிறுபான்மை சமூகங்களும், குழுக்களும் சமத்துவமுள்ள பிரதிநிதித்துவத்தைப் பெறக் கூடிய வகையில் தேர்தல் அமைப்பை உருவாக்குவது இரண்டாவது முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

மேலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்டுவதும், நாடாளுமன்றம் மற்றும் பிரதமர் பதவி ஆகியவற்றைப் பலப்படுத்துவதும் இரண்டு தரப்பினரதும் அதிமுக்கியமான கவனத்திற்குரியதாக இருக்கவேண்டும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே நல்லிணக்க அரசு ஒன்றை உருவாக்குவது பற்றிய கருத்து நாட்டில் பரவலாகக் காணப்பட்டு வந்திருக்கின்றது.

ஜே.வி.பியுடன் அரசு பேச்சு நடத்தியிருக்கின்றது.

இந்த அடிப்படையில் பல்வேறு மட்டங்களில் முறை சாராத பேச்சுகள் நடத்துள்ளன. இந்த பேச்சுகள் பூரணத்துவம் வாய்ந்ததாக இருக்கவில்லை.

எனவே அரசுக்கும் ஐ.தே.க. கட்சிக்குமிடையே நல்லிணக்க அரசை அமைப்பது சம்பந்தமாகப் பேச்சுகள் நடைபெற வேண்டும் - என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

தமது யோசனைகளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், பேச்சுக்களை விரைவில் ஆரம்பிப்பதற்குத் திகதியை நிர்ணயிக்க முடியும் என்றும் பிரதமர் எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித்திருக்கின்றார்.(உ-9)

# மீள் நியமன கட்டுப்பாட்டினால் சுகாதார சேவை பெரிதும் பாதிக்கும்

அண்மையில் வெளியிடப்பட்ட மீள் நியமனம் பற்றிய பொதுநிர்வாகச் சுற்றறிக்கை பற்றிக் கடந்த 15 ஆம், 16ஆம் திகதிகளில் வெளியான உதயன் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. பின்னர் 17ஆம் திகதி உதயனின் ஆசிரிய தலையங்கத்தில் 'பெரிதாகப் பாதிக்கப்படப்போகின்ற துறை சுகாதாரசேவைகளாகத்தான் இருக்கும்' என குறிப்பிடப்பட்டுள்ளது.

கூடுதலாக எப்பகுதி மக்களுக்கு எப்படியான பாதிப்புகள் ஏற்படலாம் என்பதை அப்பகுதி மக்களுக்கும் அவர்களின் அரச பிரதிநிதிகளுக்கும் விவரமாக அறியக் கொடுப்பது உயர் அதிகாரிகளின் கடமை. பாதிப்புகள் ஏற்பட முன்பே இதுபற்றி அமைச்சர்கள் தேவையானால் ஜனாதிபதி ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படக்கூடும். பாதிப்புகளைத் தவிர்ப்பதற்கு மாற்று நடவடிக்கைகள் இருப்பதாகத் தெரியவில்லை.

இச் சுற்றறிக்கையினால் அதிகம் பாதிக்கப்படப் போவது வடமாகாணமே. அதிலும் யாழ். மாவட்டம் எப்படிப் பாதிக்கப்படப்போகின்றது என்பதைப் பார்ப்போம். வன்னி, வவுனியா அரச பாதுகாப்புப் பகுதி பற்றிய விவரம் அதிகம் தெரியவில்லை.

ஏற்கனவே பல்வேறுபட்ட கஷ்டங்களுக்கு மத்தியில் வாழும் மக்களுக்கு இன்று தொடர்ந்து கிடைக்கக் கூடிய இலவச வைத்தியசேவை பல இடங்களில் ஸ்தம்பிதமடையும்.

நூற்றுக்கணக்கான கர்ப்பிணி தாய்மார்களின், குழந்தைகளின் தடுப்பு ஊசி ஏற்றல், பாடசாலை மாணவர்களின் வைத்திய பரிசோதனை, வைத்திய நிலையங்கள் மற்றும் - தினமும் கிட்டத்தட்ட 300 க்கு மேற்பட்ட நோயாளர்கள் வரும் ஒவ்வொரு மத்திய மருந்தகம், வைத்தியசாலைகள் என்பன அனேகமாக மீள் நியமனம் பெற்ற வைத்தியர்களினாலேயே நடத்தப்படுகின்றன.

இவ் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகூடப் பரிசோதனைகளும் மீள் நியமனம் பெற்றவர்களினாலேயே நடத்தப்படுகின்றன. மீள் நியமனம் நிறுத்தப்பட்டால் அல்லது புது நிபந்தனைகளுக்கு அமைய உத்தியோகத்தர்கள் நியமனத்தை ஏற்க மறுத்தால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளின் கதி என்ன?

யாழ்.குடாநாட்டு மக்களின் இலவச மருத்துவ சேவைக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கோ அல்லது ஒன்று இரண்டு வைத்தியர்களினுடன் செயல்படும் வைத்தியசாலைகளுக்கோ செல்ல வேண்டி வரும். ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கும் யாழ். நகருக்குத்தான் வர வேண்டும். இதனால் நோயாளர்களும் அவர்களின் உதவியாளர்களும் பெரும் அசௌகரியங்களை அனுபவிப்பதுடன் பணச்செலவையும் ஏற்படுத்தும்.

தனியார் மருத்துவர்களும் போலி வைத்தியர்களும் மருந்துகள் விற்பனையாளர்களும் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்துவார்கள்.




ஏற்கனவே வைத்திய நிபுணர்கள், பட்டதாரி வைத்தியர்கள், உதவிப் பதிவு வைத்தியர்கள், மருத்துவ உதவியாளர்கள் ஆகியோருக்கான பற்றாக்குறை, மருந்துகள் பற்றாக்குறை, குறிப்பிட்ட அவசிய மருந்துகள் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்குத் தடைசெய்யப்பட்டிருப்பது போன்ற நிலையால் இன்று மோசமாகப் பாதிப்படைந்து இருக்கும் வைத்திய சேவைகள் இந்த சுற்றறிக்கையினால் மேலும் அதிகம் பாதிப்படையும்.

மாகாண சுகாதார சேவைகள் இன்னும் 10 வருடங்களுக்குப் பின்னர் எப்படி வைத்திய நிறுவனங்களைச் செயல்படுத்தும் என்பது பற்றிய திட்டம் எதுவும் அதிகாரிகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் தென்பகுதி ஆள்களை வெற்றிடங்களுக்கு நியமிக்க திட்டம் இருந்தால் அது வேறு விஷயம். ஏனெனில் மீள் நியமனம் பெறுவோரின் எண்ணிக்கை மிகக் குறைந்துவிடும்.

உதவி வைத்தியர்கள் பயற்சி நிறுத்தப்பட்டுள்ளது. ஏனைய வைத்திய உதவியாளர்களின் பயற்சியில் தமிழர்கள் இல்லை அல்லது மிகக் குறைவு.

யாழ்பல்கலைக்கழகத்தில் பயற்சி பெற்ற வைத்தியர்களில் அனேகர் வெளிமாவட்ட அரச சேவைக்கே செல்கிறார்கள்.

எனினும் 25-04-2000 உதயனில் சுட்டிக்காட்டியது போன்று இன்று யாழ்பல்கலைக்கழகத்தில் வைத்திய உதவியாளர்களின் பயற்சிநெறி நடைபெறுகின்றது. இவர்களையும் அரச சேவைக்கு அனுமதிக்க வேண்டும். பட்டதாரி வைத்திய மாணவர்களும் குறிப்பிட்ட காலத்துக்கு யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றுமாறு கட்டாயப்படுத்தப்படவேண்டும். இல்லாவிடில் மாகாண சேவைகளை மத்திய சேவையுடன் இணைக்க வேண்டும்.

எனவே அடுத்த 5 முதல் 10 வருட காலத்துக்கு வைத்திய சேவைக்கு மீள் நியமனம் அவசியமாகின்றது.

அரச உத்தியோகத்தர்கள் ஓய்வூதியத்தையே நம்பி - எதிர்பார்த்து - தங்கள் சேவையை இடைவிடாது தொடர்கிறார்கள். ஓய்வூதியம் பெறுபவர் எக்காரணம் கொண்டும் அதை இடைநிறுத்த இசையமாட்டார். ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் கிடைக்கக் கூடிய சம்பளமோ, விசேட கொடுப்பனவோ, சேவையில் ஏற்படக் கூடிய பல்வேறுபட்ட சிறு காரணங்களைப் பெரிதாக்கி அதனால் தடைப்படலாம். ஆனால் ஓய்வூதியம் அப்படித் தடைப்படமாட்டாது. எனினும் அதை மீளப் பெறுவதிலும் தடங்கல்கள் ஏற்படலாம் என்ற சந்தேகமும் ஓய்வூதியர்களுக்கு உண்டு.

இந்தச் சுற்றறிக்கையை உருவாக்கியவர்கள் வடக்கு - கிழக்கைப் பொறுத்தமட்டில், மேல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பரிசீலனை செய்தார்களா என்பது தெரியவில்லை. 2002 ஆம் ஆண்டுக்கான மீள் நியமன சேவைகளுக்கான விண்ணப்பங்களை எப்படிக் கையாளப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

DR.V.மகேந்திரன்.


# மணீஸ் வெளியீடு

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2002

புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் 'தயார்ப்படுத்துவதற்கான விசேட வகுப்புகள் ஆரம்பமாகவிருக்கின்றது. தகுதியுள்ள குறிப்பிட்ட அளவு மாண்வர்களே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளவும்.

இடம் :சதாபொன்ஸ் கல்வி நிலையம்
காலம் :24-08-2001 வெள்ளிக்கிழமை
நேரம் :மாலை 3.00 முதல்

*மணீஸ் வெளியீடு*
*சதாபொன்ஸ்,*
*அல்வாய்.*

(C/17956)



# [illegible] விழா



திருமிகு
நா.வன்னியசிங்கம்
(அதிபர் - யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி)
அவர்கள்

இடம் : நாவலர் கலாசார மண்டபம்
காலம் : 25.08.2001 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி
தலைவர் : *சுடர் இ.மகேந்திரன்*

வன்னியசிங்கம் பொன்விழாச்சபை
யாழ்ப்பாணம்.

(91407)

'சமூகசேவையின் பேரால் மதமாற்றம்'

# வாஜ்பாயின் கருத்துக்கு இந்தியாவில் எதிர்ப்பு

புதுடில்லி,ஒக.22



இந்தியாவில் சமூக சேவையில் ஈடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் கிறிஸ்தவ மதபோதகர்கள் மதமாற்றத்தில் ஈடுபடுவதாக பிரதமர் வாஜ்பாய் கூறியதாக வெளிவந்த செய்திகளால் அவருக்கு எதிராக எதிர்ப்பலைகள் தோன்றியுள்ளன.

இது தொடர்பாக இந்திய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பிரதமர் வாஜ்பாய்க்கு கடும் கண்டனம் தெரிவித்தன.

கிறிஸ்தவ மதபோதகர்கள் உட்பட கிறிஸ்தவ சமூகத்தினர் அனைவரையும் பிரதமரின் கருத்துப் புண்படுத்தியுள்ளதாகத் தெரிவித்த இந்தியக் கிறிஸ்தவ அமைப்புக்கள் பல தசாப்தங்களாக கிறிஸ்தவ மிஷனரிகள் உலகெங்கிலும் மேற்கொண்டுவரும் சமூக சேவைகளை பிரதமர் வாஜ்பாய் கொச்சைப்படுத்திவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளன. (ஒ-4)

# விமானநிலைய தாக்குதல் திட்டம் காஷ்மீர் பொலீஸாரால் முறியடிப்பு

## இரு தீவிரவாதிகள் சுட்டுக்கொலை!

ஸ்ரீநகர்,ஒக.22

காஷ்மீரில் ஜம்மு விமானநிலையத்தின்மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படும் இரு தீவிரவாதிகளைத் தாம் சுட்டுக் கொன்றுவிட்டதாகவும்-

இதனால் ஜம்மு விமானநிலையத்தின் மீதான தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் -

காஷ்மீர் பொலஸார் தெரிவிதத னர்.

ஜம்முவின் புறநகர்ப் பகுதியான நிக்கிடாவி என்ற இடத்தில் தீவிரவாதிகள் சிலர் ஆயுதங்களுடன் மறைந்திருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து நேற்றுமுன்தினம் ஜம்மு காஷ்மீர் பொலீஸின் சிறப்புத் தாக்குதல் பிரிவு அந்தப்பகுதியைச் சுற்றிவளைத்தது.

சுற்றிவளைக்கப்பட்டதை அறிந்த தீவிரவாதிகள் பொலீஸார் மீது தாக்குதல் நடத்தினர். பொலீஸாரும் திருப்பித்தாக்கினர்.

நீண்ட நேரமாக இடம்பெற்ற மோதலின் முடிவில் இரு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் பாகிஸ்தானியர் என்று அடையாளம் காணப்பட்டார். மற்றவர் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

தீவிரவாதிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்திய இடத்திலிருந்து ஏராளமான வெடி பொருள்களும், இடைத்தர ரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடம், ஜம்மு விமான நிலையத்தின் அருகில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# இராஜதந்திரிகளுக்கு 'விஸா' வழங்க ஆப்கானிஸ்தான் தலிபான்கள் மறுப்பு

காபூல்,ஒக்.22

ஆப்கானிஸ்தானில் கிறிஸ்தவ மதப் பிரசாரத்தில் ஈடுபட்டதாகக் கூறி, தலிபான் அரசால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள, சர்வதேச தொண்டர் அமைப்புகளைச் சேர்ந்த 8 பணியாளர்களையும், பார்வையிட ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலுக்கு வந்துள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளின், 'விஸா'வை நீடிக்க ஆளும் தலிபான்கள் மறுத்துவிட்டனர்.

'விஸா'வை நீடிக்குமாறு விண்ணப்பித்த இராஜதந்திரிகள் சமர்ப்பித்த கடவுச் சீட்டுகளையும் தலிபான்கள் திருப்பிக்கொடுத்தனர்.

இதனையடுத்து குறிப்பிட்ட 3 இராஜதந்திரிகளும் உடனடியாக ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

உலக அரங்கில்

அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த இந்த இராஜதந்திரிகள் ஆப்கானிஸ்தானில், கடந்த ஒருவார காலமாகத் தங்கியிருந்த போதும், தடுத்துவைக்கப்பட்டுள்ள பணியாளர்களைச் சந்திக்க அவர்களுக்கு தலிபான் அரசு அனுமதி வழங்கவில்லை.

ஆப்கானிஸ்தானில் கிறிஸ்தவப் பிரசாரத்தில் ஈடுபட்ட குற்றத்துக்காக அமெரிக்கா, ஜேர்மனி, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 8 பேர் ஆப்கானிஸ்தானில் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே.(ஒ-4)

# அஸாமில் விதைப்பயறு உண்டதால் ஆயிரக்கணக்கானோர் பாதிப்பு

கௌகாத்தி,ஒக.22

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் நஞ்சு கலந்த பயறு விற்பனைக்கு விடப்பட்டதால், அதனை உட்கொண்ட பலர் இறந்துள்ளதாகவும், நூற்றுக்கணக் கானவர்கள் பாதிப்படைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் சங்கர்தேவ் நகரில் கோயில் ஒன்றில் விநியோகிக்கப்பட்ட ஊறவைத்த பயறை சாப்பிட்ட சுமார் ஆயிரம்பேர் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பாடசாலை மாணவர்களாவர்.

இதேசமயம் மல்வாரி மாவட்டத்தில் குடும்ப விழா ஒன்றில் பயறை அவித்து உண்ட 5 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேர் பாதிக்கப்பட்டனர். இவர்களில் நான்குபேர் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு விதைக்காக விவசாயிகளுக்கு விநியோகிக்க அரசு களஞ்சியப்படுத்தியிருந்த பயறை முறைகேடாகப் பெற்று சிலர், விற்பனைக்கு விட்டதாலேயே இந்த ஆபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக வர்த்தகர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மாநிலம் முழுவதும் பயறு விற்பனைக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# நக்ஸலைட்டுகளின் தாக்குதலில் எட்டு ஆந்திரப் பொலீஸார் பலி!

ஹைதராபாத்,ஒக.22

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் மக்கள் யுத்தக் குழு என்ற நக்ஸலைட் அமைப்பு நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி 8 பொலீஸார் உயிரிழந்தனர்.

மாநில பஞ்சாயத்துத் தேர்தலின் மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பொலீஸார் இந்தத் தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக ஜீப்பில் சென்றுகொண்டிருந்த சமயத்தில், ஜீப் கண்ணிவெடியில் சி[illegible]யது. இதில் ஜீப்பிலிருந்த 8பொலீஸார் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

மேலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆந்திர மாநிலத்தில் நக்ஸலைட் அமைப்பான மக்கள் யுத்தக் குழு பஞ்சாயத்துத் தேர்தல்களைப் புறக் கணிக்குமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)



அமெரிக்காவின் பத்து மாநிலங்களின் வனப் பிரதேசங்களைப் பாதித்துள்ள காட்டுத் தீயினால் சுமார் 5லட்சத்து 84 ஆயிரத்து 500 ஏக்கர்கள் பிரதேசம் சாம்பல் மேடாகியுள்ளது.

சுமார் 21 ஆயிரம் தீயணைப்பு வீரர்கள் காட்டுத் தீயை அணைக்கப் போராடி வருகிறார்கள்.

ஒராகன் பகுதியில் வானளாவக் கொழுந்து விட்டெரியும் காட்டுத் தீயைக் கண்டு தீயணைப்பு வீரர் ஒருவர் மலைத்துப்போய் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# இந்தியாவின் பாஸ்மதி அரிசிக்கு அமெரிக்க நிறுவனம் காப்புரிமை

புதுடில்லி,ஒக.22

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் விளைபொருள்களில் பிரதான இடத்தை வகிக்கும் பாஸ்மதி அரிசிக்கு அமெரிக்க நிறுவனம் ஒன்று காப்புரிமை பெற்றுவிட்டது.

அமெரிக்க காப்புரிமை மற்றும் வர்த்தக முத்திரை அலுவலகம், டெக்ஸாஸில் உள்ள "ரைஸ்டெக்" கூட்டுத்தாபனம் என்ற அமெரிக்க நிறுவனத்துக்கு பாஸ்மதி அரிசியின் 3 உயர் ரகங்களுக்கு காப்புரிமை வழங்கியுள்ளது.

இந்தியா ஏற்றுமதி செய்யும் மேம்படுத்தப்பட்ட பாஸ்மதி அரிசி விற்பனை, இதனால் தடைசெய்யப்படும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

### உலகளவில் மதிப்பு

இந்திய, பாகிஸ்தான் எல்லைப் பிரதேசத்தில் உள்ள இமயமலை அடிவாரத்தில் விளையும் பாஸ்மதி அரிசிக்கு, உலக அளவில் வரவேற்பு இருந்து வந்தது. குறிப்பாக பணக்கார இல்ல விழாக்களில் பாஸ்மதி அரிசி பயன்படுத்தி உணவு வகைகள் செய்வது மதிப்பிற்குரியதாகக் கருதப்பட்டது.

இந்த நிலையில் டெக்ஸாஸில் உள்ள 'ரைஸ்டெக்' கூட்டுதாபனம், நெல்லில் விஞ்ஞான முறையில் சில மாற்றங்களை ஏற்படுத்தி அதில் விளைவது பாஸ்மதி அரிசியின் தரத்துக்கு இருப்பதாக நிரூபித்து, பாஸ்மதி அரிசிக்கு உலக அளவிலான காப்புரிமையைக் கோரியது.

இதனை ஏற்றுக்கொண்ட அமெரிக்கக் காப்புரிமை மற்றும் வர்த்தக முத்திரை அலுவலகம் 'ரைஸ் டெக்' நிறுவனத்துக்கு மேம்படுத்தப்பட்ட பாஸ்மதி அரிசிக்கான காப்புரிமையை வழங்கியுள்ளது.

உலக ரீதியான வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் காப்புரிமைச் சட்டத்துக்கு இந்தியாவும் கட்டுப்படவேண்டியுள்ளது.

### மஞ்சள், வேம்பு

காலங்காலமாக இந்தியாவில் மருத்துவப் பயன்பாட்டுக்காக உபயோகப்படுத்தப்பட்ட மஞ்சள், வேம்பு போன்றவற்றுக்கு அமெரிக்க மருத்துவ தொழிற்சாலை ஒன்று காப்புரிமை பெற்றதால் மஞ்சள், வேம்பு ஆகியவற்றிலிருந்து இந்திய நிறுவனங்கள் மருந்து தயாரிப்பதானால் அமெரிக்க நிறுவனத்துக்குக் காப்புரிமைக் கட்டணம் செலுத்திய பின்னரே தயாரிக்கக் கூடிய நிலை தோன்றியுள்ளது.

மஞ்சள், வேம்பு ஆகியவற்றிலுள்ள மருத்துவ குணங்களுக்குக் காரணமான மூலகங்களை விஞ்ஞான ரீதியில் கண்டறிந்து, அவற்றுக்கு அமெரிக்க நிறுவனம் காப்புரிமை பெற்றுக்கொண்டதே இதற்குக் காரணமாகும்.

இந்த நிலையில் தற்போது பாஸ்மதி அரிசிக்கான காப்புரிமையும் அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### மேன்முறையீடு

ஆயினும் இந்த முடிவை எதிர்த்து சட்ட மேன்முறையீடு செய்யப்போவதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பாஸ்மதி அரிசிக்கான காப்புரிமையை அமெரிக்க நிறுவனம் பெற மத்திய அரசின் கையாலாகத் தனமே காரணம் என்று கூறி நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தால் நாடாளுமன்றம் ஸ்தம்பித்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு!

இஸ்லாமாபாத்,ஒக.22

பாகிஸ்தானின் லாகூர் நகரில் மக்கள் குடியிருப்புகள் அதிகமுள்ள பகுதியொன்றில் நேற்றுமுன்தினம் குண்டு ஒன்று வெடித்ததில் 14 பேர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் கால்கள் இரண்டையும் இழந்ததாகவும், ஒரு பெண்ணும் சிறுவன் ஒருவனும் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## காஸாவில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

காஸா,ஒக.22

பலஸ்தீனப் பிரதேசமான காஸாவில் பலஸ்தீனர் ஒருவரும், அவரது இரு பிள்ளைகளும் கொல்லப்பட்டது தொடர்பாக இஸ்ரேலியர்களும் பலஸ்தீனர்களும் பரஸ்பரம் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து இரு தரப்பினரிடையேயும் மோதல்கள் அதிகரித்துள்ளன. (ஒ)

# ஐ.நா. மற்றும் அமெரிக்காவுக்கு பலஸ்தீனர்கள் கடும் கண்டனம்

மத்தியகிழக்கின் மேற்குக்கரையிலும், காஸா பிரதேசத்திலும் சர்வதேச அவதானிகளை பணியில் ஈடுபடுத்த எந்தவித முயற்சிகளையும் மேற்கொள்ளாததையிட்டு, ஐ.நா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் மீது பலஸ்தீனர்கள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, பலஸ்தீனர்கள் முன்வைத்துள்ள சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் தொடர்பான யோசனை, ஒருபக்கச் சார்பானதும், நடைமுறைப்படுத்த முடியாததும் ஆகும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

15அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐ.நா பாதுகாப்புச் சபையில், 'வீட்டோ' அதிகாரத்தைக் கொண்ட அமெரிக்கா, மத்திய கிழக்குத் தொடர்பான பாதுகாப்பான பாதுகாப்புச்சபை விவாதமொன்றில் இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயற்பட்டது. அமெரிக்காவின் இத்தகைய நடவடிக்கைகளால், இஸ்லாமிய மதத்தைக் கடைப்பிடிக்காத பல நாடுகள் மேற்காசிய அமைதி குறிதத தீர்மானம் ஒன்றை மேற் கொள்ளுமாறு கூறவோ, அல்லது வாக்களிப்பில் கலந்து கொள்ளவோ பின்னடித்து வருகின்றன.

இதனால் ரஷ்யா போன்ற நாடுகள் சர்வதேச கண்காணிப்பாளர்கள் விடயத்தில் மௌனம் சாதித்து வருகின்றன.

பிரச்சினைக்குரிய பகுதிகளில் சர்வதேசக் கண்காணிப்பாளர்களை அனுமதித்தால், தமது இராணுவம், பலஸ்தீனர்களுக்கு எதிராக நடத்தும் மனித உரிமை மீறல்கள் அம்பலமாகுமென இஸ்ரேல் அஞ்சுவதாக அரசியல் ஆய்வாளர்கள கருதுகின்றனர். (ஒ-4)

## குடாநாட்டுக்குத் தரைவழிப்பாதைக்கு அனுமதி:

# தளர்வான போக்கை கடைப்பிடிக்க அரசை வலியுறுத்தி வருகிறோம்

## ரூபவாஹினிப் பேட்டியில் டக்ளஸ்

கொழும்பு, ஒக. 22

குடாநாட்டுக்குத் தரைவழிப்பாதையைத் திறப்பதற்கு அனுமதி வழங்கும் விடயத்தில் தளர்வான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அரசை வலியுறுத்தி வருகின்றோம்.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவரது பேட்டி தொடர்பாக ஈ.பி.டி.பி. விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒரு தனி மனிதனுக்கு பசியும், தாகமும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து இரு வெவ்வேறு பிரச்சினைகளாக இருக்கின்றதோ அதேபோலவே எமது இனத்திற்கு அபிவிருத்தியும், அரசியல் உரிமையும் ஒன்றுடன் ஒன்று பிணைந்த இரு வெவ்வேறு பிரச்சினைகளாகும்.

அன்றாடப்பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசியல் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். ஒன்றுக்காக மற்றையதைப் பின் தள்ளுவதோ, ஒத்திப் போடுவதோ தேவையற்றது. இரண்டையும் சம காலத்தில் முன்னெடுக்கும் போக்கிலேயே ஈ.பி.டி.பியினராகிய நாங்கள் செயற்பாட்டு வருகின்றோம்.

மக்கள் தமது வாழ்வில் எதிர்நோக்கும் நாளாந்தப் பிரச்சினைகளுக்கு நிவாரணம் வழங்குதல், வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தல் என்பனவற்றிற்கு ஊடாக எமது பணிகளை மேற்கொள்கின்றோம். அதேவேளை மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்னும் எங்கள் அரசியல் இலக்கை முன் வைத்து, எக்காலமும் பிரிக்கப்படாத வடக்கு—கிழக்கு மாநிலத்திற்கு விஷேட அதிகாரங்கள் வழங்கப்படுவதன் மூலம் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு என்பதை நடைமுறைச் சாத்தியமான மாற்றுவழியில் நிலைநாட்டப் பாடுபட்டு வருகின்றோம்.

யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்து பணியாற்றுவதன் நோக்கம் பற்றிய கேள்விக்கு பதிலளித்த அவர், நிலத்தைப் பண்படுத்தவேண்டுமானால் இறங்கி உழவேண்டும். அதுபோல நீண்டகாலமாக ஒரு மாறுபட்ட அணுகுமுறைக்கு பழக்கப்பட்ட மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டி வளர்க்க வேண்டுமானால், அவர்களுடன் கூடவே வாழ வேண்டும் என்னும் தேவை இருப்பதாகவே உணர்கின்றேன்.

### குடாநாட்டுக்குள் பிரவேசம்

1990 ஆம் ஆண்டில் குடாநாட்டின் தீவுப்பகுதிகளில் காலடி எடுத்து வைத்த எமது அமைப்பு 1995க்கு பின்னர் படிப்படியாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் பிரவேசித்தது.

1997 ஜனவரியில் யாழ்ப்பாண நகரத்தில் அலுவலகத்தைத் திறந்தது முதல் எமது தோழர்கள் இங்கேயே தங்கியிருந்து பணி புரிகின்றனர்.

திருவிழாவுக்குக் கடை விரிக்கும் பெட்டிக் கடைக்காரர்கள் போல தேர்தல் திருவிழாவுக்காகக் கிளை திறக்கும் 'பம்மாத்து' அரசியல் எமக்கு உடன்பாடானது அல்ல. எனவேதான் இங்கேயே தங்கியிருந்து பணி புரிகின்றேன். எனினும் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்புக்குப் பொறுப்பான அமைச்சு என்ற வகையில் வவுனியா, மன்னார் போன்ற இடங்களிலும் அமைச்சின் சுற்றயல்கூறு அலுவலகங்கள் உண்டு. அவற்றின் பணிகளைக் கண்காணித்து மேற்பார்வை செய்யும் தேவையும் இருக்கிறது — என்றார்.

யாழ்ப்பாண மக்கள் போக்குவரத்து, பொருள்களை எடுத்துவருவது உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப் படுத்துவது என்பவற்றில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய கேள்விக்கு பதிலளிக்கையில்—

குடாநாட்டுக்கான தரைவழிப்பாதை மூடப்பட்டிருப்பது பெரும் துரதிர்ஷ்டமே. 1977இலும் 1983இலும் தம்புள்ள, கெக்கிராவ, அநுராதபுரம் போன்ற சிங்கள ஊர்களுக்கு ஊடாகப் பயணம் செய்ய அஞ்சியே தமிழ் மக்களுக்கு கப்பலும், விமானமும் தேவைப்பட்டது. ஆனால் தற்போது தமிழ்ப்படை என்று சொல்லப்படும் 'புலிப்படை' இருக்கும் வவுனியா முதல் கிளிநொச்சியைக் கடக்கும் வரையிலான பாதைதான் தமிழ் மக்களின் போக்குவரத்துக்கு மூடப்பட்டு இருக்கிறது.

### எந்தப் பயனும் இல்லை.

பொதுமக்களின் போக்குவரத்திற்காக ஐ.சி.ஆர்.சி. போன்ற அமைப்புகளின் வழித்துணையுடனாவது தரைப்பாதை திறக்கப்பட வேண்டும் என்று நாம் பலமாக வலியுறுத்தி வருகின்றோம். கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயர்கள் ஊடாகவும் இந்த வேண்டுகோளை விடுத்திருந்தோம். எனினும் எதுவித பயனும் கிட்டவில்லை.

எனினும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறும் விடயத்தில் தளர்வான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றோம் எனவும் தெரிவித்தார் — என்றுள்ளது. (க-3)

## கப்பல் பயணப் பதிவுகள் இந்த வாரத்தில் இல்லை

யாழ்ப்பாணம், ஒக. 22

கப்பல் பயணத்துக்கான பதிவுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறமாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 6ஆம், 11ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள பயணத்துக்கான பதிவுகள் எதிர்வரும் 31 ஆம் திகதியும்—

அடுத்த மாதம் 13 ஆம், 18 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள பயணத்துக்கான பதிவுகள் 7 ஆம் திகதியும்—

அடுத்த மாதம் 20 ஆம், 25 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள பயணத்துக்கான பதிவுகள் 14 ஆம் திகதியும்—

அடுத்த மாதம் 27 ஆம் திகதியும், ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதியும் இடம்பெறவுள்ள பயணத்துக்கான பதிவுகள் அடுத்த மாதம் 21 ஆம் திகதியும் இடம்பெறும் என்று 'நான்' அலுவலகம் அறிவித்துள்ளது. (க-10)

## நடமாடும் சேவை மூலம்

# அதிபர், ஆசிரியர்கள் பலரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

யாழ்ப்பாணம், ஒக. 22

யாழ். மாவட்டத்தின் கல்விப் பிரச்சினைகள் தொடர்பான நடமாடும் சேவை நேற்று நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவையில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி அலுவலர்களால் முன்வைக்கப்பட்ட பல பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்டதுடன் சிலரின் பிரச்சினைகள் தொடர்பாக அவர்களது ஆவணங்களை வடக்கு – கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு எடுத்துச் செல்வதற்கெனச் செயலாளரினால் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டன.

காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்தச் சேவையில் சுமார் 500 பேர் வரையில் கலந்துகொண்டு தமது பிரச்சினைகளை முன்வைத்தனர். இந்த நடமாடும் சேவையால் வடக்கு – கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.நா. தணிகாசலம் பிள்ளை, ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அவற்றின் உயரதிகாரிகள் மற்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-10-51)

## ஆசிரியர் தெரிவு நேர்முகப் பரீட்சை

வடக்கு—கிழக்கு மாகாண தமிழ்மொழி மூல அரசாங்க பாடசாலைகளில் தகுதிகாண் ஆசிரியர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், வடமராட்சி மற்றும் தீவக கல்வி வலயங்களில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்துக்கான நேர்முகப் பரீட்சை நாளை வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் இடம்பெறும். (-10)

## மாகாண அமைச்சு செயலாளருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம் வந்துள்ள வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் கே. பரமேஸ்வரனை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாவட்டத்தில் பணி புரியும் கலாசார உத்தியோகத்தர்கள் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றனர்.

இந்தச் சந்திப்பு யாழ். செயலகத்தில் இடம்பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

## சமய சந்திகளில்

வடமராட்சி மாலுசந்தி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய மணவாளக்கோல தினத்தினையொட்டி இன்று புதன்கிழமை காலை சங்காபிஷேகம் நடைபெறும் அதனைத் தொடர்ந்து நண்பகல் மாகேஸ்வர பூசையும் இடம்பெறும். (க)

* * *

யாழ். வண்ணை ஸ்ரீ அரசடி விநாயகர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஆவணிச் சதுர்த்தி உற்சவம் நடைபெறுகிறது.

இதனையொட்டி மாலை 6, 30 மணிக்கு 'விநாயக பரத்துவம்' என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவு இடம்பெறுகிறது. (ஒ)

* * *

வடலியடைப்பு புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான நூதன வசந்த மண்டப பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 7.45 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறுகிறது. (ம-4)

* * *

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான குடமுழுக்குப் பெருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

சங்குசக்ர கதாபத்மதர ஸ்ரீ கிருஷ்ணபகவான் (குருவாயூரப்பன்) பரிவாரமூர்த்திக்கு அடியார்கள் எண்ணெய்க் காப்பும், ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத ஸ்ரீரங்கநாதப் பெருமானின் எழுந்தருளி மூர்த்திக்கு பால்காப்பும் சாத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் ஆரம்பமாகித் தொடர்ந்து இன்று வரை நடைபெறுவதாக தேவஸ்தான பரிபாலன சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

வடலியடைப்பு புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான நூதான வசந்த மண்டப பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 7.45 மணி முதல் உள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும் என ஆலய பூங்காவன அமைப்புக் குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-15)

* * *

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி திருவிழா இன்று புதன்கிழமை காலை 11.00 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் நடைபெறும். (ம-17)

உடுவில் சொர்ண சித்தி பஞ்சமுக விநாயகர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை விசேட மஹா கணபதி ஹோமம் இடம்பெறும். (ம)

* * *

அச்செழு நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயிலில் புதிய காண்டாமணி பிரதிஷ்டை இன்று புதன்கிழமை நடைபெறும்.

புதிதாக அமைக்கப்பட்ட மணிக் கூண்டுக் கோபுரத்தில் புதிய காண்டாமணி பிரதிஷ்டை செய்யப்பட்டவுள்ளது. (ம-11)

* * *

வண்ணார்பண்ணை மணிக்கூட்டுவீதி அரசடி அருள்மிகு விநாயகர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும்.

எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அஷ்டோத்ர சத சங்காபிசேகமும், யானை வாகனத் திருவிழாவும், மறுநாள் முதலாம் திகதி சனிக்கிழமை திருவூஞ்சல் தண்டிகை உற்சவமும் நடைபெறுவதுடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவுறும். (ம-178)

* * *

வட்டுக்கோட்டை துணவி அரசடிப் பிள்ளையார் கோயில் வருடாந்த அலங்காரத்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (ம-4)

* * *

இன்பர்சிட்டி, வியாபாரி மூலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவ நாள்களில் தினமும் இடம்பெறவுள்ள சமயச் சொற்பொழிவில் 'விநாயகர் புராணம்' எனும் விடயம் பற்றி வரணியூர் சைவப் புலவர் சி.கா. கமலநாதன் சொற்பொழிவாற்றுவார். (ம-10)

## வாக்காளர் இடாப்பு பிரதிகளைப் பெற

# யாழ். தேர்தல் அலுவலகத்துக்கு இளைஞர்கள் படையெடுப்பு!

யாழ்ப்பாணம் ஒக. 22

யாழ். செயலக தேர்தல் அலுவலகத்தில் ஏராளமான இளைஞர் யுவதிகள் வாக்காளர் இடாப்பின் பிரித்தெடுப்பிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு முண்டியடித்து வருகின்றனர்.

இன்று யாழ். மாவட்டத்தின் கல்விவலயங்களில் நடைபெறவுள்ள தகுதிகாண் ஆசிரியர் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளவுள்ளவர்களே தேர்தல் அலுவலகத்துக்குபடையெடுத்திருந்தனர்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு குறுகியகால அவகாசத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புவிடுக்கப்பட்டதுடன் ஆவணங்கள் பலவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது

இதனை அடுத்தே மேற்படி அலுவலகத்தில் பிரித்தெடுப்பிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கென நூற்றுக் கணக்கானவர்கள் திரண்டிருந்தனர். (க.10)

## நீர்வேலிப் பகுதி இளைஞர் விடுதலை

கோப்பாய்ப் பகுதியில் அண்மையில் படையினரால் கைது செய்யப்பட்ட நீர்வேலி தெற்கைச் சேர்ந்த ராஜரத்தினம் பார்த்தீபன் என்ற இளைஞன் யாழ். நீதிவான் ஆர். ரி. விக்னராஜர்வால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இவர் மீது வழக்குத் தொடர போதிய சாட்சியங்கள் இல்லை என பொலீஸார் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து அவரை நீதிவான் விடுதலை செய்தார். (க-3-6)

## நிவாரண விநியோகம்

யாழ். ப.நோ.கூ. சங்கம் இடம்பெயர்ந்தவர்களுக்குரிய ஜூலை, ஒகஸ்ட் மாதங்களுக்குரிய நிவாரணப் பொருள்களை விநியோகித்து வருகின்றது. (க-17)

# உதயன்

## தலையிடக் கோருவோம்!

இரசாயன ஆயுதங்களை ஸ்ரீலங்கா இராணுவம் கொள்வனவு செய்திருப்பது பற்றிய தகவலை வெளியிட்டதற்காக அந்தப் பத்திரிகையை ஒரு பிடி பிடித்திருக்கின்றார் இராணுவத் தளபதி.

தாறுமாறாக உயர்ந்துவரும்

# உருளைக்கிழங்கின் விலையை குறைக்க அரசு நடவடிக்கை

கொழும்பு,ஓக.22

(ஏ-1)

## விபத்தில் காயம்

(ம-15)

# நாட்டு நடப்பு

மாணவரும் கழுதையும்

ஓட்டை கட்டி பொதியை முதுகில் சுமப்பதனால்
இட்டமுடன் தெருவில் இடர் தந்து நடப்பதனால் – கூட்டமாய்
கட்டளையை மீறி கத்திக் கனைப்பதனால்
கெட்ட மாணவரும் கோடான கழுதையுமொன்றே கேள்.

– ஸீகடகவி.

# நாட்டின் நெருக்கடியை சமாளிக்க காபந்து அரசு அமைக்க வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க யோசனை

கொழும்பு,ஓக.22

நாட்டின் தற்போதைய நெருக்கடிகளைச் சமாளிக்க சகல கட்சிகளும் அங்கம் வகிக்கும் காபந்து அரசை அமைத்து அந்த அரசின் கீழ் உடனடியாகப் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு யோசனை தெரிவித்திருக்கிறார் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

(ம-4)

# கூத்துப் பாடல்களைக் கேட்டு நடிகருக்கு வந்த கோபம்!

## மண்வெட்டி பிடி அடியால் மூவர் காயம்

(ட-117)

# தாமதமாக வந்து கிடைக்கும் கருத்தரங்கு அழைப்புக் கடிதங்கள்

(ம-117)

## நவாலியில் உதைபந்தாட்டப் போட்டி

(ஏ-36)

## நால்வர் குறித்து இன்னும் தகவல் இல்லை

பிரஸ்தாப நபர்களைத் தாங்கள் கைது செய்யவில்லை என்று பதில் அளிக்கப்பட்டதாகவும் –

மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சரவணமுத்து சிறீதரன் (வயது 24), செல்வரத்தினம் சத்தியரூபன் (வயது 18), விக்கிரமசிங்கம் தமிழ்ச்செல்வன் (வயது 21), தேவராசா வேந்தன் (வயது17) ஆகியோரே காணாமற்போனவர்களாவர். (உ-3)

# கட்டுநாயக்கா தாக்குதல் தொடர்பாக முஸ்லிம் உட்பட மேலும் 9 பேர் கைது

கொழும்பு,ஓக.22

(ம)

## ப.நோ.கூ. ச.கிளை மீண்டும் திறப்பு

(ம-17)

## நாளை

ஆவணி 5
வெள்ளிக்கிழமை
திதி: ஷஷ்டி
முன்னிரவு : 8.49 வரை
நட்சத்திரம் : சுவாதி
பின்னிரவு 10.08 வரை
சுபநேரம்: 6.05 - 7.35
ராகுகாலம் : 10.35 - 12.05

## உதயவாக்கு

# கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சாவகச்சேரி கட்டுக்காணியைச் சேர்ந்த இளையதம்பி யோகேஸ்வரி என்பவரது தேசிய அடையாள அட்டையும்(இல.365972117V), விசேட அடையாள அட்டையும் மருதனார் மடம் சந்திக்கும் உடுவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பிறேமறாஜன், இலங்கை வங்கி, சுன்னாகம். அல்லது இணுவிலில் இயங்கும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (91403)

அம்பாள் வீதி, கொக்குவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லத்துரை என்பவரின் தேசிய அடையாள அட்டை(இல.431301075V), விசேட அடையாள அட்டை(இல.0902001916) நல்லூர் ப.நோ.கூ.ச.ஆள் அடையாள அட்டை என்பன 18-08-2001 அன்று நல்லூரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நல்லூர் ப.நோ.கூ.சங்கத்தில் ஒப்படைத்துதவவும். (91406)

பத்தமேனி அச்சுவேலியைச் சேர்ந்த கோ.கனகரஞ்சிதம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.468170213V), விசேட அடையாள அட்டை(இல.0903010937), விமானப் பயணச்சீட்டு என்பன பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் புறப்பட்ட பஸ்ஸினுள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் அல்லது அச்சுவேலி ராஜன் தேநீர்க் கடையில் ஒப்படைத்துதவவும். (91408)

சம்பந்தர் கண்டி காரைநகரைச் சேர்ந்த து.கார்த்திகேசுவின் தேசிய அ.அட்டை(இல.261590140V) நல்லூர் கோயில் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிறீமுருகன் களஞ்சியம், 424, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (91409)

## இறைச்சிக்கோழிகள் தேவை

சிவப்பு பேட்டுக் கோழிகள் இறைச்சிக்குத் தேவை. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரச் சந்தையடி, நல்லூர். (91396)

## இறைச்சிக் கோழிகள் விற்பனை

**Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து(பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (91397)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. **1 Kg 150/-** சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- றாஜீவ், ஆனைக்கோட்டைச்சந்தி. **T.P. 3529, 2867.** (91413)

**IBS** *கல்வி நிறுவனம். சுண்டிக்குளி/கோயில்வீதி*

**புலமைப் பரிசில் - 2002**
**புதிய மாணவர்களை இணைத்தல். வாராந்த பயிற்சிப் பரீட்சைகளுடன் விசேட தனிப்பட்ட கவனிப்பு.**
*ஆரம்பம்:-* **25.08.2001**
9.p.m.

**தரம் 6 முதல் O/L வரை**
**புதிய மாணவர்களை இணைத்தல்**
(சுண்டிக்குளி மற்றும் கோயில் வீதியிலுள்ள நீங்கள் விரும்பும் கல்வி நிறுவனத்தில்)
*பிரபல்ய மாணவ, மாணவிகளின் தெரிவு* **I.B.S.** *மட்டுமே.*
(91402)

## தவறாது சமுகமளிக்கவும்

1990ஆம் ஆண்டு முதலாக மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள அனைவரையும் நாளை (23.08.2001) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் ஒன்றுகூடுமாறு வேண்டுகின்றோம்.

வரும்போது அடையாள அட்டை, குடும்ப அட்டை முதலானவற்றைக் கொண்டு வரவும். இடம்பெயர்ந்ததற்கான நஷ்டஈட்டுக்கு விண்ணப்பிக்கவே கூடவிருப்பதால் எல்லோரும் தவறாது சமுகமளிக்கவும்.

*நீர்வேலி.* (91410) - வே.ஜெயராணி.

## நன்றி கூறுகின்றோம்

**வில்லிபாதி முருகன் ஆலயம்,**
**புலோலி வடமேற்கு**

எமது ஆலயத்தின் புனருத்தாரண திருப்பணி வேலைகளுக்கு ரூபா இரண்டு லட்சம் நிதியை ஒதுக்கீடு செய்து, அதில் ஒரு லட்சம் ரூபா நிதியை வழங்கி உதவியமைக்காக,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார, இந்து கலாசார அமைச்சரும், ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய
மாண்புமிகு
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்

ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய
கௌரவ **கே.வி.குகேந்திரன்**
**(ஜெகன்)**
அவர்களுக்கும்





பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளருமாகிய
**உயர்திரு. ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**
J.P.U.M.
அவர்களுக்கும்

எமது ஆலய வளர்ச்சியில் அக்கறை கொண்டு இந்நிதி உதவி செய்தமைக்கு எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்

**பரிபாலன சபையினர்,**
**வில்லிபாதி முருகன் ஆலயம்**

*புலோலி வடமேற்கு,*
*புலோலி.* (91393)

## மந்திகை நோயாளருக்கு இளநீர்

தென்மராட்சி,ஓக.22

நல்லூர் ஆலய உற்சவத்திற்கு அடியார்களால் வழங்கப்பட்ட இளநீரில் மேலதிகமாக இருந்தவை ஆலயத் தொண்டர்களால் நேற்று மந்திகை ஆஸ்பத்திரி நோயாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இளநீர் வாகனமொன்றில் கொண்டு வரப்பட்டு ஆஸ்பத்திரியில் வழங்கப்பட்டன. (ம-117)

## பருத்தித்துறையில் கசிப்பு வேட்டை

தென்மராட்சி,ஓக.22

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் நேற்று அதிகாலை துன்னாலை கிழக்கு குடவத்தை, வேம்படி, கோவில் சந்தை ஆகிய பகுதிகளில் திடீர் பரிசோதனைகளை நடத்தினர். இதன்போது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டோரிடமிருந்து அவர்கள் கசிப்பினையும் கைப்பற்றியுள்ளனர். (ம-117)

## சிறுவர் சண்டையால் பெரியவர்கள் ஆஸ்பத்திரியில

தென்மராட்சி,ஓக.22

சிறு பிள்ளைகள் சண்டை பெற்றோர்களிடையே மோதலை ஏற்படுத்தியதில் தகப்பனும் மகனும் இரும்புக் கம்பியினால் தாக்கப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை தும்பளை இலட்சுமணன் தோட்ட முகாமில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் காயமடைந்த நாகர் கோயிலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கண்மணி (வயது 43), இரைது மகனான கண்மணி கேதீஸ்வரன் (வயது22),ஆகியோர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் . (ஒ-117)

## சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஓக.22

சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்ப படிவங்கள் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்பட இருப்பதாக யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைகளம் அறிவித்துள்ளது. (ம-117)

## கல்வி வலய உதைபந்தாட்டப் போட்டிகள்

குருநகர்,ஓக.22

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகள உதைபந்தாட்டச் சங்கம் யாழ்.மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் 'சுப்பர் சிக்ஸ்' உதைபந்தாட்டப் போட்டியில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்ற உள்ள பாடசாலைகளின் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.45 யா/புனித ஜோசப் வித்தியாலயம் எதிர் யா/ஊரெழு கணேசா வித்தியாலயம்

பிற்பகல் 4.30 யா/புனித பத்திரிசியார் கல்லூரி எதிர் யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்.

பிற்பகல் 5.10 யா/புனித ஜோன்ஸ் கல்லூரி எதிர் யா/புனித ஜேம்ஸ் ம.வி. (ஒ-51)

## வைத்தியசாலையை தரமுயர்த்த நடவடிக்கை

அச்சுவேலி,ஓக.22

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையை மாவட்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த வைத்தியசாலை அபிவிருத்திச் சபை முயற்சி எடுத்து வருகிறது.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் கூட்டம் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர்.சி.விமலேந்திரன் தலைமையில் நடைபெற்றபோது ஆஸ்பத்திரியைத் தரமுயர்த்துவது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

பரந்த பிரதேசத்தில் வாழும் பொது மக்களுக்கான வைத்திய சேவைகளை வழங்கிவரும் அச்சுவேலி வைத்தியசாலையைத் தரமுயர்த்தல், புதிய மாடிக்கட்டடத் தொகுதி நிர்மாணம் ஆகியவற்றுக்கான முயற்சிகளை மேற்கொள்ள விசேட நடவடிக்கைக் குழுக்கள் மேற்படி கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டன. (ஒ-11)

## சேவைநலன் பாராட்டு

யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.
**சேவைநலன் பாராட்டி வாழ்த்துகின்றது**



**திருவாளர் வேலுப்பிள்ளை நாகராசா** (J.P.)
***(உப அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.)***

உயர்திரு.நாகராசா ஆசிரியர் அவர்கள் தமது 37 வருட ஆசிரிய சேவையில் 16 வருடங்களை எமது பாடசாலைக்கு அர்ப்பணித்து இன்று (22.08.2001) புதனன்று ஓய்வுபெறுவதையிட்டு நாம் அவரது சேவையைப் பாராட்டி நிற்கின்ற வேளையில், அவர் சமாதான நீதிவானாக (J.P.) உயர்ந்திருப்பது எம்மைப் புளகாங்கிதம் அடையச் செய்கின்றது.

**அறிவொளிக்கதிரே ஆசிரியப் பெருந்தகையே - நீ**
**ஆற்றிய சேவையைப் பொறிக்க வேண்டும் கல்லில் - ஆனால்**
**வரைந்தோம் எம்மனங்களில் அழியாப் பேனாவால்**
**விரிந்தே செல்லட்டும் நின்புகழ் சமூகத்தில் சமாதான நீதிவானே!**

*யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.* (C/17949) **பாடசாலைச் சமூகம்.**

உ

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி

## ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம் மணவாளக்கோல விழா விஞ்ஞாபனம்

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் விஷு வருஷம் ஆவணித்திங்கள் 6ஆம் நாள் இன்று (22-08-2001) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு அம்பாளுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் விசேட சங்காபிஷேகம், விசேட தீபாராதனை இடம்பெறும். பின்னர் மாகேஸ்வர பூசை (அன்னதானம்) நடைபெற்று, அம்பாள் அழகிய பூந்தண்டிகையில் வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். அத்தருணம் அடியார்கள் வருகைதந்து அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகின்றோம்.

முன்னாள் பிரபல தெனியாய வர்த்தகர்
தாமோதரம்பிள்ளை
அன் சன்ஸ் குடும்பத்தினர்.
*பிரதான வீதி, தெனியாய.*

மணவாளக்கோல உற்சவ உபயகாரா
மகாமாரி அம்பாள் றான்போட் சேவிஸ்
தாமோதரம்பிள்ளை இராசேந்திரம்
(N.T.R)
*புளியங்கூடல்.*

(91411)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கா.மாணிக்கவாசகர்**
*(யாழ்.,கிளிநொச்சி முன்னாள் அரச அதிபரும், மாவட்டச் செயலாளரும்)*

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து இக்கட்டான காலகட்டத்தில் எம்மண்ணுக்கும், மக்களுக்கும் ஆற்றிய சேவையை இன்று நினைவு கூருவோமாக!

ஓம் சாந்தி!

கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

அன்புடன் நினைவு கூரும்:
**பாலகிருஷ்ணன் குடும்பத்தினர்.**

(91428)

## கண்ணீர் அஞ்சலி

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் தனது சேவைக காலம் முழுவதும் பணியாற்றி, அதனை வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு, கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து, ஓய்வுபெற்ற எங்களின் வணக்கத்துக்குரிய ஆசான்

**உயர்திரு. சி.மு.சுப்பிரமணியம்**
**அவர்களின் அன்புத் தாயார்**

**திருமதி அன்னம்மா முத்துக்குமாரு**

அவர்கள் நேற்று (21-08-2001) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னையின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல நடேஸ்வரா ம.வி. புவனேஸவரித் தாயைப் பிரார்த்திக்கின்றோம்.

நடேஸ்வராக் கல்லூரிச் சமூகம் சார்பாக
**செல்வி இராஜேஸ்வரி நாகமுத்து.**

(91416)

# யாழ். ஆஸ்பத்திரி மலசலக் கழிவுகளை வெளியேற்ற வடிகாலமைப்புத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.22

யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து மலசலகூடக் கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவதற்கான வடிகாலமைப்புத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். போதனா வைத்தியசாலையில மலசலகூடக் கழிவுகள் தற்போது பம்பிகள் மூலம் சுத்திகரிக்கப்படாமல் பண்ணைப் பாலத்துக்கு செலுத்தப்படுகின்றது. இதனால் சுற்றுப்புறச் சூழல் மாசடைகின்றது. சுற்றாடலில் வசிக்கும் மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இந்த நிலையை மாற்ற வடிகாலமைப்புத் திட்டம் ஒன்றை முன்னர் நடைமுறைப்படுத்த முயன்ற போதும் அது நடைமுறைக்கு வரவில்லை.

போதனா வைத்தியசாலையில் வடிகாலமைப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு பொது அமைப்புகளும், வைத்தியசாலை அதிகாரிகளும் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இதனை அடுத்து சுகாதார அமைச்சர் செனவிரத்தினாவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சந்தித்து யாழ். வைத்தியசாலையில் வடிகாலமைப்புத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். அதனை ஏற்றுக் கொண்ட சுகாதார அமைச்சர் இதற்குரிய நிதியாக 19 மில்லியன் ரூபாவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்துள்ளார்.

இத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார். (ம)

## ஐ.தே.க. பேரணியில் உயிரிழந்தோர் குடும்பங்கள் ரூபா 2 கோடி நஷ்டஈடு கோரி உயர் நீதிமன்றில் மனு தாக்கல்

கொழும்பு,ஓக.22

கடந்த ஜூலை மாதம் கொழும்பில் ஐ.தே.கட்சி நடத்திய அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணியின் போது, பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட இருவரது குடும்பத்தவர்கள், தமக்கு நஷ்டஈடாக 2கோடி 40லட்சம் ரூபா பெற்றுத்தருமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் சமர்ப்பித்துள்ளனர்.

ஐ.தே.கட்சி பேரணியின் போது கொட்டாஞ்சேனையை சேர்ந்த மஞ்சுள பிரசாத், கேகாலையைச் சேர்ந்த அசிந்த குணரத்ன ஆகியோர் பொலீஸ் தாக்குதலில் உயிரிழந்தனர்.

இவர்களில் மஞ்சுள பிரசாத்தின் தாயார் நிர்மலா பெரேராவும் அசிந்த குணரத்னவின் மனைவி புஷ்பா அபேசேகராவும் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

பேரணியில் ஆத்திரமூட்டும் சம்பவங்கள் எதுவும் இடம்பெறாமலேயே பொலீஸார் தாறுமாறாகச் சுட்டதாக மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலீஸாரின் தாக்குதலில் காயமடைந்த பலர், இந்த மனு மீதான விசாரணையின் போது சாட்சியமளிக்க உள்ளனர்.

கொட்டாஞ்சேனை, பேலியகொடை பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த 8 சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ஒ)



இலங்கை வங்கியின் 62ஆவது வருட பூர்த்தியையொட்டிய விழா நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் அண்மையில் இடம்பெற்றது.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

முகாமையாளர் ஆர்.இராஜேந்திரா, உதவி முகாமையாளர் ந.இராஜகோபால், சட்டத்தரணி ஏ.கே.நடராஜா ஆகியோரும் அருகில் காணபடுகின்றனர். (ம-117)

## தேர் தரிப்பிட அடிக்கல் நடும் விழா

அரியாலை,ஓக.22

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் தேர் தரிப்பிடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும்.

இதேசமயம் ஆலயத்தின் மேற்குப்புற உள்வீதி மண்டபத்தைப் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ம-12)

## சிறப்புப் பேச்சாளர் தினம்

யாழ்ப்பாணம்,ஓக.22

யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் கழக சேவை செயற்திட்டத்தின் கீழ், மாதாந்தம் நடத்தப்படும் சிறப்பு பேச்சாளர் தின முதலாவது நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இல.12, சிவகுருநாதர் வீதியில் உள்ள யாழ்.றோட்டறிக் கழக தலைவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதில் இளைப்பாறிய நீதிபதி மு.திருநாவுக்கரசு 'எங்கே போகிறோம்?' என்ற தலைப்பில் உரையாற்றுவார். (ம)

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவருக்கு

யாழ்ப்பாணம்,ஓக.22

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களை இன்று புதன் கிழமை காலை 8.30மணிக்கு கலாசாலைக்கு சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

மாணவர்கள் தமது சம்பளங்களைப் பெறுவதற்காகவே இன்று வருகை தருமாறு கோரப்பட்டுள்ளது. (ம)

## வீதி விபத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,ஓக.22

அச்சுவேலி கதிரிப்பாய் - வளலாய் வீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் - மினிபஸ் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் காயமடைந்தார்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்றவரான வளலாய் கிழக்கைச் சேர்ந்த குமாரு சந்நதிநாதன் (வயது 34) என்பவரே மரணமானவராவார்.

படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்திய சிலநிமிட நேரத்தில் அவர் அங்கு மரணமானார்.

மோட்டார் சைக்கிளில் அவருடன் சென்றவரான தம்பாலையைச் சேர்ந்த ஆர்.தரிசன் (வயது 12) என்ற சிறுவன் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரணவிசாரணையை மேற்கொண்ட யாழ்.நீதிவான் சடலத்தை ஆஸ்பத்திரியில் சென்று பார்வையிட்டு, பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரிக்குப் பணித்ததை அடுத்து, சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-15)

## கோழித்தீன் தயாரிக்கும் தொழிற்சாலை வடமராட்சியில்

### விரைவில் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.22

வடமராட்சியில் கோழித்தீன் தயாரிப்புக்கான தொழிற்சாலை ஒன்று விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடபகுதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக இத் தொழிற்சாலையைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

இத்தொழிற்சாலை திறக்கப்படுவதன் மூலம் கோழித்தீன் மலிவு விலையில் கிடைக்கச்செய்ய இயலுமானதாக இருக்கும் அத்துடன் உள்ளூர் வேலை வாய்ப்புக்களும் அதிகரிக்கும் என்று அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வடமராட்சி கடற்பகுதியில் மீனவரின் வலை மிதப்புகளை தொடர்ச்சியாக அறுப்பதாகப் புகார்

வடமராட்சி,ஓக.22

வடமராட்சி கடற்பரப்பில் கடற்படையினரால் மீனவர்களின் வலை மிதப்பு தொடர்ச்சியாக அறுக்கப்பட்டு வருவதாக ஈ.பி.டி.பியின் வடமராட்சிப் பிரதேசப் பொறுப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனிடம் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் முதல் வடமராட்சி கடற்பரப்பில் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டபோதிலும் மீனவர்கள் முற்பகலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் வேளைகளில் நீருந்து விசைப் படகுகளில்(வோட்டர் ஜெட்) வரும் கடற்படையினர் வலைகளையும் வலை மிதப்புக்களையும் அடிக்கடி அறுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மீனவர்கள் பெறுமதி மிக்க வலைகளை இழக்கவேண்டியுள்ளதாக வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் (திங்கள்) இதே போன்று மீனவர்களின் வலை மிதப்புக்கள் அறுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-173)

# வாசகர் திருமுகம்

## ஏன் இந்தப் பிழைபிடிப்பு?

கடந்த 19ஆம் திகதி வெளியான 'வாசகர் திருமுகம்' பகுதியில் நக்கீரன் என்பவரால் எழுதப்பட்ட 'ஏன் இந்தக் குழையடிப்பு' என்ற மடல் மூலம் வெளிப்படுத்த விரும்பிய செய்தியில் காணப்பட்ட அறிவீனம் வருந்தத்தக்கது.

பாராட்டு, கௌரவிப்பு என்பன செயற்கரிய செயலாற்றியவர்களுக்கும், சேவைகள், உதவிகள் வழங்குபவர்களுக்கும் கொடுக்கப்படுகின்ற பிரதி உபகாரமாகும். இது அவசியமானதும் கூட. இத்தகைய பாராட்டுதல்களை யதார்த்தம் உணர்ந்தோர் வெளியிடுவது இயல்பே. இதை அறியாமல் கோயிலிலே பிரசங்கம் செய்யும் பிரசங்கியாருக்குப் பொன்னாடை, பொற்கிளி போன்றவற்றால் பாராட்டும் கௌரவிப்பும் செய்வதில்லையா? அது வீணானதா? அல்லது பிரசங்கியாராலேயே மேற்குறித்த செயல் ஆற்றப்படுகின்றதா? இவற்றால் தெளிவுறும் மக்களுக்கு நக்கீரனின் மடல் மடமைமிக்கதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கோயில் இருந்தாலேயே பிரசங்கியாருக்குக் கௌரவிப்பும் பிறவும். அந்தக் கோயிலை எழுப்புவித்த வழியமைத்த அமைச்சருக்கும் ஏனைய அங்கத்தவர்களுக்கும் இந்தப் பாராட்டும் கௌரவிப்பும் மனமாரச் செய்ய வேண்டிய ஒன்றே. இதை நக்கீரன் அறியாரா?

மேலும் இப்பாராட்டுத் தெரிவிப்பானது குறித்த அமைச்சரும் கட்சியும் மக்களுக்கு ஆற்றும் உதவிகளையும் சேவைகளையும் பறைசாற்றுகின்றது என்பது உண்மை. இதன் மூலம் மக்கள் உண்மை நிலைகளை அறிந்து செயற்படுகின்றனர். அவ்வாறு இல்லாவிடின் அவர்கள் செய்யும் சேவை குறித்து மக்களும் அறியமாட்டார்கள்.

இதனைவிட நக்கீரன் போன்றோர் அதுகுறித்து பதுக்கல், அடிப்பு, மோசடி என்று வேறுவிதமாக மடல் வரைவார்கள்.

அதிகளவில் உதவிகளும சேவைகளும் ஆற்றப்படும் போது அந்த அளவிற்குப் பாராட்டு விளம்பரங்கள் வருவது தவிர்க்க முடியாததே. கொழும்புப் பத்திரிகைகளில் ஓரிரு விளம்பரம் வருவதற்குக் காரணம் எதுவாக இருக்கும் என்பதனை நீங்களே புரிந்துகொள்ளுங்கள்.

நிவாரணம், சீருடை எனும் அத்தியாவசிய நலன்புரி உதவி நடவடிக்கைகளை உதாரணம் காட்டும் நக்கீரன் விமர்சனங்களுக்குத் தகுதியானவரா? புலமைப்பரிசில் காலகட்டத்தில் இந்த விளம்பரங்கள் கண்ணுக்குத் தென்படுவதில்லையா?

பிறருக்கு உதவி செய்ய முடியாவிடினும் உதவுபவர்களைப் பாராட்டும் பக்குவத்தைப் பெறுங்கள் அது மனிதத்துக்கே அழகு சேர்க்கும்.

*திருநெல்வேலி.* **றூபன்.**

## பரீட்சை தொடர்பாக விளக்கம் தேவை

27.08.2001 திகதி நடக்கவிருக்கும் 'பொது ஆங்கிலம்' பாடம் பற்றிய பலவாறான விளக்கங்கள் பரீட்சார்த்திகளிடையே உலவுகின்றன. இது விருப்புப் பாடம் என்றும் -

அவ்வாறுதான் செய்தி ஊடகங்கள் மூலமாக அறிவிக்கப்பட்டதாகவும் -

பேசப்படுகின்றது. உதயன் நாளிதழில் என்ன தேடியும் இது சம்பந்தமான செய்தியைக் காணமுடியவில்லை.

இப்பாடத்திற்கு இரண்டு பாடப்புத்தகங்கள் உண்டென்றும் -

தனது பிரபல கல்லூரிக்கு 14 புத்தகங்களே வந்தனவென்றும் -

ஒரு பரீட்சார்த்தி குறை சொன்னார்.

வேறொரு கல்லூரியில் சில மாதங்களுக்கு முன்னர்தான் ஒரு புத்தகம் விநியோகிக்கப்பட்டதென்று அறியக்கிடக்கின்றது.

இரண்டு வருடங்கள் படித்து எழுத வேண்டிய பாடத்தை சில மாதங்கள் சுயமுயற்சியாகப் பயின்று பரீட்சையெழுதி சித்திபெறுவது இயலாத காரியமாகும். மேலும் பாடப்புத்தகங்கள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகளின் நிலை கவலைக்குரியதாகும்.

இவற்றையெல்லாம் ஒருமித்து நோக்குமிடத்து இப்பாடம் கட்டாயப் பாடமன்று, விருப்புப் பாடமாகத்தான் இருக்குமென்று தோன்றுகின்றது.

எவ்வாறாயினும் இதுபற்றிய விளக்கத்தை உதயன் ஊடாக சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் 27ஆம் திகதிக்கு முன்னர் தருவார்கள் என்று பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

*நெல்லியடி.* **கே.திரவியம்.**

## கல்வி அதிகாரிகள் திரும்பிப் பார்ப்பார்களா?

2000ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து நடைபெற்றுவந்த யுத்தத்தினால்; தென்மராட்சியில் பேரழிவுகள் ஏற்பட்டன என்பது உலகறிந்த உண்மை. இக்கொடிய யுத்தத்தினால் இப்பிரதேசத்தின் பல கல்விக்கூடங்கள் உருக்குலைக்கப்பட்டு, முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு அமைச்சரின் மீள் குடியேற்ற நடவடிக்கையால் கைதடி, மீசாலை ஆகிய இடங்களில் 4 பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கௌரவ அமைச்சர் எடுத்திருக்கும் துணிச்சல்மிக்க, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைப் பாராட்டும் அதே நேரத்தில், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் என்ன செய்கின்றார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

2000ஆம் ஆண்டு ஆவணி மாதத்திலும், 2001ஆம் ஆண்டு ஆவணி மாதத்திலும் யாழ்ப்பாணத்திற்கு 'திக் விஜயம்' மேற்கொண்ட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்விக்கூடங்களை ஒருதரம் தரிசித்து நிலைமைகளை நேரடியாகக் காண விளைந்தார்களா என்றால், இல்லை என்றே கூறவேண்டும்.

வெறுமனே யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து கல்வி வலயங்களின் அதிகாரிகளை ஒரு இடத்தில் கூட்டிவைத்து மணித்தியாலக்கணக்காக 'போர்' அடிப்பதும், இடம்பெயர் சேவை என ஏதோ ஒப்பாசாரத்துக்கு நடத்திவிட்டு, தங்களின் விஜயம் பூர்த்தியாகிவிட்டது என்ற போலியான எண்ணக்கணிப்புடன் திரும்பிச் சென்றுவிடுவதும் சரிதானா?

தயவுசெய்து சம்பந்தப்பட்ட மேற்படி 'பெரியவர்கள்' - கைதடி, நாவற்குழி, கோயிலாக்கண்டி, மறவன்புலவு, மட்டுவில், நுணாவில், கல்வயல், சாவகச்சேரி போன்ற பகுதிகளில், இருந்த இடம்தெரியாமல் உருக்குலைந்துபோய்க் காட்சியளிக்கும் கல்விக்கூடங்களை நேரில் பார்த்து அழிவுகளின் அகோரத்தை மதிப்பீடு செய்யவேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். இக்கைங்கரியத்தைச் செய்வதன் மூலம் நீங்கள் பல யதார்த்த நிலைமைகளை அறியமுடிவதுடன் இப்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகங்கள் எதிர்நோக்கும், மேலும் எதிர்நோக்க இருக்கும் பாரிய பிரச்சினைகளை உணரமுடியும்.

எனவே மதிப்புக்குரிய செயலாளர் அவர்களே, மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்களே! சிரமத்தைப் பாராமல், இம்முறையாவது இப்பாடசாலைகளை நேரில் சென்று தரிசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தற்போது இவ்விடங்களுக்குச் செல்வதற்கு தடையில்லை என்பதையும் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன். நீங்கள் இக்கைங்கரியத்தைச் செய்வதன்மூலமும், உருப்படியான முன்மொழிவுகளைக் கொடுப்பதன் மூலமும், புனர்வாழ்வு, மீளக்குடியமர்தல் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கும் உதவியாக இருப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

**தென்மராட்சியாளன்.**

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஓக.22

யாழ்பிராந்திய மக்கள் வங்கியும் மக்கள் வங்கி விளையாட்டுக் கழகமும் இணைந்து மட்டுப்படுத்தப்பட்ட 6 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றினை நடத்துகின்றன.

இந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் மை.எம்.எச்.ஏயில் விண்ணப்பப்படிவங்களைப்பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## யாழ். ஆஸ்பத்திரியில்
# புதிய 'எக்ஸ்-றே' இயந்திரத்தை பொருத்த இடமில்லையாம்!

யாழ்ப்பாணம்,ஓக.22

யாழ்.போதனா வைத்தியசாலை 'எக்ஸ்-றே' பிரிவுக்கு அண்மையில் சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட புதிய 'எக்ஸ்றே' இயந்திரம் இடப்பற்றாக்குறை காரணமாக பொருத்த முடியாத நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

'எக்ஸ்றே' பிரிவுக்கு என ஒதுக்கப்பட்ட கட்டடத்தின் அறைகளில், 'எக்ஸ்-றே' செயற்பாட்டுக்கு இல்லாமல் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுவருவதனாலேயே இந்த இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

'எக்ஸ்றே' செயற்பாட்டின் பாவனையில் உள்ள ஓர் அறையில், பழுதடைந்து திருத்த முடியாத நிலையில் - திருத்த வேலைகளுக்காக கொழும்புக்கு அனுப்பவென ஆயத்தப்படுத்தப்பட்ட - ஓர் இயந்திரம் நீண்டகாலம் அங்கிருந்து அகற்றப்படாது இருக்கின்றது. இன்னோர் அறையில் 'ஸ்கானிங்' இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. மற்றோர் அறையில், நோயாளியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட 'எக்ஸ்-றே' இயந்திரத்தைப் பொருத்துவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மற்றோர் அறையில் தற்போது இயங்கிவரும் 'எக்ஸ்-றே' இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.

எஞ்சிய இரு அறைகள் நிர்வாகத்தினால் வேறு தேவைகளுக்குப் பாவிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் புதிய இயந்திரத்தைப் பொருத்துவதற்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இயங்கக்கூடிய புதிய இரண்டு இயந்திரங்கள் இருந்தும், ஒரேயொரு 'எக்ஸ்-றே' இயந்திரம் மாத்திரம் இயங்குவதால் 'எக்ஸ்-றே' படம் எடுப்பதில் நிலவும் தாமதம் மேலும் தொடரும் நிலையே நீடிக்கின்றது. (உ)

## கல்முனை வாசி கைது

யாழ்ப்பாணம்,ஓக.22

மருத்துவ சிகிச்சைக்காகக் கொழும்புக்குச் சென்ற கல்முனை வாசி ஒருவர் கடந்த 14ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்முனை பிரதான வீதியைச் சேர்ந்த தங்கராசா யோகச்சன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே கைது செய்யப்பட்டவராவார். (ம-4)

## பஸ்ஸிலிருந்து விழுந்து காயம்

யாழ்ப்பாணம்,ஓக.22

ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸின் மிதிபலகையில் இருந்து விழுந்த ஒருவர் காயமடைந்தார்.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ஸ்ரீதரன் ஸ்ரீரஞ்சன் (வயது29) என்பவரே காயமடைந்தவராவார். அவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ப-15)

## ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம் 1964 - 09 - 14

மரணம் 1996 - 08 - 22

### அமரர் செல்வராஜா கிரிதரன்

(பொறியியலாளர் - லண்டன்)

*ஆண்டுகள் ஐந்தாகி ஆறாத்துயராகி*
*அறிந்த உன் ஆவியும் அடங்கிடுமோ?*
*ஆயிரம் ஆயிரமாய் வருடங்கள் சென்றாலும்*
*ஆழ் மனதில் உன் நினைவுகளை அழிக்கவும் முடியுமோ?*

*பெற்றோர்:* திரு. நா.செல்வராஜா குடும்பம் (U.K)
*சகோதரிகள்*
திருமதி சுபதினி ரமேஷ் குடும்பம் (Jaffna)
திருமதி சாந்தினி சண்முகநாதன் குடும்பம் (U.K)
திரு. முரளிதரன் குடும்பம் (Australia)
செல்வி சாமினி செல்வராஜா (Colombo)

35/5,
குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(91769)

### முன்பள்ளி பாலர் ஆசிரியராகப் பயிற்சி

தபால் வழியில்
ஆறுமாதகாலப் பயிற்சி
குறைந்த தகைமை
ஜி.சி.ஈ. (சாதாரண தரம்)
*விபரங்களுக்கு:-*
பாலர் ஆசிரியர் சங்கம்,
கொக்குவில். (91035)

## ஓராண்டு நினைவலைகளில்......



அன்னை மடியில் 28 - 02 - 1934

அம்மனின் அடியில் 22 - 08 - 2000

### அமரர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்

*(ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர், மாவட்ட செயலாளர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம்)*

மனிதருள் மாணிக்கம் எனத் திகழ்ந்த மன்னன்
மண்ணுக்காய் நிதம் உழைத்து மகிழ்வுற்ற அண்ணல்
விண்ணுக்குப் போனதனால் விட்டிடுமோ பாசம்?
கண்ணுக்குள் கனக்கிறதே நீ தந்த நேசம்!

விதியென்ற விதியொன்று விளையாடும் காலன்; எம்
பதி என்னும் உம் மீது சதி செய்து விட்டான்!
எது நன்று தீதென்று அறியாத பாவி
எமக்கோர் வழியில்லை இது என்ன நீதி?

யாருக்கு உதவுமுற்றான் உண்மை அன்பு உள்ளம்; நின்
பேருக்கு பொருந்துகின்ற பெருமதியாய்; நெஞ்சு
யாருக்கு வாய்க்குமிந்த மாறியோம் அன்பு
பாருக்கே பேரிழப்பு "ஓராண்டு உறக்கம்" !!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*மடத்தடி ஒழுங்கை,*
*மானிப்பாய் தெற்கு,*
*மானிப்பாய்.*

- குடும்பத்தினர். (91380)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் ஆவணி மாதம் 6ஆம் நாள் இன்று (22.08.2001) புதன்கிழமை காலை 9.05 மணி முதல் 10.05 மணி வரையில் வரும் சுப முகூர்த்தத்தில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

## "லக்ஷ்மி வாசா"

எனும் புதுமனையில் குடிபுகுவதற்கு நிச்சயித்துள்ளோம். ஆகவே அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து புதுமனையை ஆசீர்வதித்து எம்மை மகிழ்வித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்
*திரு. திருமதி ஸ்ரீஸ்கந்தராசா - சாந்தினி*
*திரு. செ. கந்தசாமி பத்தர் குடும்பத்தினர்.*

*18,சபாபதி வீதி,*
*தலையாழி, கொக்குவில்.* (91229)

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



*மலர்வு* 09 - 04 - 1932

*உதிர்வு* 23 - 07 - 2001

### அமரர் வயிரமுத்து தம்புக்குட்டி

(ஓய்வுபெற்ற புகையிரத பாதை கங்காணி, பளை)

தாயாய் தந்தையாய்
நேசமுடன் எமை வளர்த்து
தேசம் புகழ வைத்த
எம் அன்புத் தந்தைக்கு எமது அஞ்சலிகள்!

எமது தந்தையாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு, அவ்வேளைக்கும், பல்வேறு விதத்திலும் உதவிகள் புரிந்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், கடிதங்கள், தந்திகள் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (22.08.2001) புதன்கிழமை எமது தற்போதைய வதிவிடத்தில் அன்னாரின் நினைவாக நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தற்போதைய வதிவிடம்:*
*டிப்போ முன்பாக*
*துவாரகை வீதி,*
*கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.*

- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
*கண்டி வீதி, பளை.*

சிவமயம்

# தசாக கிரஹஜஞ்ஞ அழைப்பு



அன்புடையீர்,

விஷு வருடம் ஆடிமாதம் 29ஆம் நாள் (14-08-2001) செவ்வாய்க்கிழமை தசமித் திதியில் சிவபதமடைந்த

எங்கள் குடும்பத் தலைவர்

### பிரம்மஸ்ரீ சிவசாமிக்குருக்கள் பரமேஸ்வரசர்மா

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | |
|---|---|
| 23-08-2001 | வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தசாகம் |
| 24-08-2001 | வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஏகோதிஷ்டம், மாசியம் |
| 25-08-2001 | சனிக்கிழமை காலை 10 மணிக்கு சபிண்டீகரணம் |
| 26-08-2001 | ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கிரஹஜஞ்ஞம். |

மேற்படி தினங்களில் வந்து கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (91343) மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கொழும்புக்குச் செல்லவுள்ள பிரதம பரீட்சகர்களுக்கு!

யாழ்ப்பாணம், ஓக. 22
தற்பொழுது நடைபெற்று வருகின்ற ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடும் பணியில் ஈடுபடவுள்ள பிரதம பரீட்சகர்கள் எதிர்வரும் 25 ஆம்திகதி சனிக்கிழமை விமானம் மூலம் கொழும்பு செல்லவுள்ளனர்.

இதற்காக, கொழும்பு செல்லவுள்ள பிரதமபரீட்சகர்கள் எதிர்வரும் சனிக்கிழமை காலை8.30மணிக்கு பயணத்துக்கான ஆயத்தங்களுடன் யாழ். சிங்கள மகா வித்தியாலயத்துக்கு வருகை தருமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் கேட்டுள்ளார்.

விடைத்தாள்களை மதிப்பிடும் பணியில் ஈடுபடவுள்ள உதவிப் பரீட்சகர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு செல்லவுள்ளதால், அவர்கள் அனைவரையும் அன்றைய தினத்தன்று காலை 8.30 மணிக்கு யாழ். சிங்கள மகா வித்தியாலயத்துக்கு பயண ஆயத்தங்களுடன் வருகை தருமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

(ஓ–10)

## கட்டடத்துக்கு அடிக்கல் நடும் விழா

தென்மராட்சி, ஓக. 22
துன்னாலை வடக்கு வல்லியானந்தம் சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைப்பார்.

சனசமூக நிலையக் கட்டடம் அமைப்பதற்கு மூலதன நன்கொடை நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-117)

## குழந்தைகள் காப்பகம் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஓக. 22
குழந்தைகள் காப்பகம் நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமிய மட்டத்தில் உழைக்கும் பெண்கள் வேலைக்குச்செல்லும் வேளைகளில் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பொது நிலையமாக இக்குழந்தைகள் காப்பகம் தொழிற்படும். அத்துடன் இக்குழந்தைகள் காப்பகத்தில் பராமரிக்கப்படும் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது— என்று அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

(ம)

## மூவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஓக. 22
கச்சாய்ப் பகுதியிலிருந்து பசுமாட்டினை கடத்தி வந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட மூவரை கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில்ஆஜர் செய்தனர்.

மூன்று சந்தேக நபர்களையும் நாளை வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ம–171)

## நெடுந்தீவு மாணவருக்கு ஊக்குவிப்பு உதவி

யாழ்ப்பாணம், ஓக. 22
நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நன்கொடைப் பணம் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டம் சங்கத்தின் எல்லைப்பகுதிக்கு உட்பட்ட மாணவர்களுக்கென நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் உபதலைவர் சு. கணேசலிங்கம் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் ஒருவருக்கு நன்கொடைப் பணமாக 2500 ரூபா வீதம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ம-17)

## நிமலராஜன் நினைவு தின போட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக. 22
ஊடக வியலாளர் அமரர் மயில்வாகனம் நிமலராஜனின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பினால் கவிதை கட்டுரைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

வயதுக்கட்டுப்பாடின்றி திறந்த முறையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு கேட்டுள்ளது

(ம-4)

# வங்கிக் கிளை மூடப்பட்டதால் வாடிக்கையாளர்கள் சிரமம்

வடமராட்சி, ஓக. 22
வாரத்தில் இரு தினங்கள் பருத்தித்துறையில் இயங்கி வந்த சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை எதுவித அறிவித்தலுமின்றி மூடப்பட்டுள்ளதால் தென்மராட்சிப் பிரதேச வங்கி வாடிக்கையாளர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் பல்வேறிடங்களிலும் தங்கியுள்ள தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்தவங்கி வாடிக்கையாளர்களின் வசதி கருதி வாரத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளைக்கு அருகில் சாவகச்சேரி இலங்கைவங்கிக் கிளை கடந்த காலங்களில் இயங்கி வந்தது.

ஆனால் கடந்த சில வாரங்களாக குறிப்பிட்ட தினங்களில் வங்கிக்கிளை திறக்கப்படுவதில்லை. திறக்க முடியாமைக்கான காரணம் எதுவும் கூட அறிவிக்கப்படவில்லை.

இந் நிலையில் பிரதி, செவ்வாய், வியாழக்கிழமைகளில் வங்கிக்கு வரும் வங்கி வாடிக்கையாளர்கள் வங்கி திறக்கப்படாமையினால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. (ம-173)

## மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 22
வடலியடைப்புக் கிராமத்துக்கு மின் வழங்குவதற்கான ஆரம்ப நிகழ்வு இன்று புதன்கிழமை புதராணை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றிலில் இடம்பெறும்.

மின் வழங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக ஆலய முன்றிலில் இருந்து மின்கம்பங்கள் நடும் பணி இன்று ஆரம்பித்து வைக்கப்படும் என்று வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் தெரிவித்தார்.

(ம)

## தபாலகத்துக்கு பெறுமதியான முத்திரைகள்வந்தன

யாழ்ப்பாணம், ஓக. 22
யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்துக்குப் பெறுமதி மிக்க முத்திரைகள் எடுத்து வரப்பட்டுள்ளன. 1000ரூபா, 500ரூபா முத்திரைகள் இன்று புதன்கிழமை தொடக்கம் விநியோகிக்கப் படவுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் சி. மார்க்கண்டன் தெரிவித்துள்ளார்.

(ம–10)

## சந்நிதியான் தெய்வீக கலைநிகழ்வு

வடமராட்சி, ஓக. 22
தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்று வரும் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்று வரும் உற்சவகால தெய்வீகக் கலை நிகழ்வில் நான்காம் நாளான இன்று புதன்கிழமை சொல்வாரிதி இரா. கேதீசன் 'மெய்ப்பொருள் நாயனார்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

ஐந்தாம் நாளான நாளை வியாழக்கிழமை அருட்கவி. ஞானபண்டித அமிர்தசுரபி சி.விநாசித்தம்பி 'பழநிக்கந்தன்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

(ம–173)

# வல்வினை போக்கும் விநாயகரைப் போற்றி

# அன்பும் அருளும் பெற ஆவணிச் சதுர்த்தி

**இன்று ஆவணிச் சதுர்த்தி விரதம்.**

விநாயகப் பெருமான் உடற்பலத்துக்கும், ஞானச் செழுமைக்கும் அடையாளமானகடவுள். எந்தக் காரியத்துக்கும் இந்த இரண்டும் தேவை. விக்னேஸ்வரருடைய அனுக்கிரகம் இருந்தால் இப்பூவுலகில் எந்தக் காரியமும் நடையின்றி நடக்கும். தடைகளை நீக்கி பூரண அனுக்கிரகம் செய்கின்ற தெய்வம் பிள்ளையார். 'ஓங்கார ரூபாய நம' என ஓத வினை அகலும்; ஓங்கு புகழ் பெருகும்.

விநாயகப் பெருமானின் யானைத் தலையின் தத்துவம் யாதெனில், தேவையற்ற விடயங்களை உதறி நல்ல விடயங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். அஞ்ஞான இருளை அகற்றி, ஆசைகளைக் கட்டுப்பாட்டில் வைப்பவர் மூஷிகவாகனன்.

'பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் தருவேன் நீ எனக்கு சங்கத்தமிழ் மூன்றும் தா' என்று விநாயகப் பெருமானிடம் ஔவைப்பிராட்டி வேண்டினார். அவ்வாறே இறைவனுக்கு விருப்பமானதை எப்போது கொடுக்கிறீர்களோ அப்போது இறைவன் உங்களுக்குத் தேவையானதை அளிப்பார். இந்த உண்மையை விளக்குவது விநாயகர் தத்துவம். சுயநலத்தைத் தியாகம் செய்து பிறர் நலன் நாடி ஆன்மீக வாழ்க்கை நடத்தவேண்டும். அதன் மூலம் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ளவேண்டும். இதுவே நிஜமான விநாயகர் தத்துவம்.

அற்புத கீர்த்திக்கும், ஆனந்த வாழ்வுக்கும், நற்பொருள் பெறுவதற்கும், நலமெல்லாம் விளைய அருள் தரும் விநாயகப் பெருமானின் சிறந்த விரதமாக ஆவணிச் சதுர்த்தி அமைகிறது. ஒவ்வொரு மாதமும் வரும் சதுர்த்தி விரதங்களின் சிகரமாக ஆவணிச் சதுர்த்தி விளங்குகிறது.

முப்புரத்து அசுரர்களை அழிப்பதற்காக சிவபிரான் தேரில் சென்று கொண்டிருந்த பொழுது தேர் அச்சு முறிந்துவிட்டது, விக்னேஸ்வரர் பூசை பண்ணாமல் புறப்பட்டதால்தான் இந்தத் தடங்கல் ஏற்பட்டதாக சிவபிரான் முடிவுசெய்து விநாயக பூசை செய்தார்.

ஆனந்தமடைந்த விநாயகர் தந்தைக்கு அருள் பாலித்தார்.

ஒருமுறை சிவபெருமானும் பார்வதியும் கைலாயத்தில் தாயம் ஆடிக்கொண்டிருந்தார்கள். இதில் யார் வென்றது எனத் தீர்ப்புக் கூறும் பொறுப்பு நந்தியிடம் ஒப்படைக்கப்பட்டது. நந்திக்கு ஈஸ்வரன்மீது அபிமானம் அதிகம். அதனால் தோற்ற போதும்கூட ஈஸ்வரனே வென்றதாக அறிவித்தார். பார்வதி கோபத்தில் நந்தியைச் சபித்தார். நந்தி பார்வதி பாதம் பணிந்து பாவ விமோசனம் கோர, பார்வதி மனமிரங்கி ஆவணிச் சதுர்த்தியில் எனது மகன் கணபதியின் பிறந்த தினத்தன்று உனக்குப் பிரியமான அறுகம் புல்லினால் அர்ச்சனை செய்தால் உன் சாபம் நீங்கும் என அருளினார். விநாயக பூசைக்கு அறுகம்புல் பயன்படுவதற்குரிய காரணத்தை



விளக்க மேற்படி நிகழ்ச்சி கூறப்படுகிறது.

'விநாயகப் பெருமானுடைய திருவடிகளில் சேர்க்கும் அறுகுக்கு இந்திரன் முதலானவர்களுடைய செல்வமும் ஒப்பாகாது' என்று விநாயக புராணம் விளக்கும். புண்ணியம்—பாவம்; சுகம்—துக்கம்; சங்கல்பம்—விகல்பம்; தர்மம்—அதர்மம் இப்படி ஒன்றுக்கொன்று நம்மிடம் உள்ள இரட்டைப்பண்புகள் ஒழிந்து விநாயகப் பெருமானை எங்கள் மனம் நாடி விநாயகரிடம் கலக்கவேண்டும் என்பதை உணர்த்துவதற்காகப் பிள்ளையாருக்கு இரட்டை அறுகம்புல்லால பூசை செய்யும் வழக்கத்தை நம்முன்னோர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பிள்ளையார் வழிபாட்டில் அவர்முன் நின்று தோப்புக் கரணம்' போடுவது சிறப்புக்குரியதாகும். இரண்டு கைகளாலும் காதைப் பிடித்துக் கொண்டு பலமுறை உட்கார்ந்து எழுந்திருக்கும் இம் முறைக்குப் பின்னால் ஒரு கதை இருக்கிறது.

ஒருமுறை மகாவிஷ்ணுசிவனைப் பார்க்கக் கைலாயம் சென்றபோது வழியில் பிள்ளையாரைக் கண்டு சிறிது நேரம் விளையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுதுவிஷ்ணுவின் சக்கராயுதத்தைவாங்கிக்கொண்டார் பிள்ளையார். 'என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடு" என்று விஷ்ணு கேட்டார். விநாயகர் மறுத்து விட்டார். உடனே விஷ்ணு காதுகளைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து எழுந்தார். இதைக் கண்டு விழுந்து விழுந்து சிரித்தார் விநாயகர். சக்கராயுதம் வாயிலிருந்து விழுந்து விட்டது. விஷ்ணு அதனை எடுத்துக் கொண்டு அது முதல் விநயகரிடம் எதையாகிலும் வேண்டி நிற்கும் பொழுது தோப்புக்கரணம் போடுவது வழக்கம். தோர்பி கைகளினால்; கர்ணம்-காது. கைகளினால் காதைப்பிடித்துக்கொள்வது என அர்த்தம்.

நாம் சுறுசுறுப்பாக அடிக்கடி உட்கார்ந்து எழுந்தால் (தோப்புக் கரணத்தால்) இரத்தக்குழாய்கள் சுருங்கி சோர்வடையாமல் இரத்தம் நன்கு பாய்ந்து மூளைக்குப் பலம் கொடுக்கும். அந்த இரத்தம் மூளைக்குச் சென்றால் மனதில் சாந்தமான நினைவுகள் மலரும் என்பது அறிவியல் உண்மை.

பிள்ளையாருக்கு மோதகம் விருப்பமானது. வெண்மையான மாவுக்குள் வெல்ல பூரணத்தை வைத்து நிவேதிப்பது என்பது நாம் பரிபூரணமான சச்சிதானந்த பிரமத்தைப் பூரணமாகக் காணும் பாக்கியம் பெற வேண்டும் என்பதை நினைவூட்டுகிறது. பிள்ளையாருக்கு மோதகம் நைவேத்தியம் செய்து முதன்முதலாக வழிபட்டவர் வசிட்ட முனிவரின் பத்தினியான அருந்ததி

**நந்தன்**

தேவியார் என்று புராணம் கூறுகிறது.

தேங்காயைப் பிள்ளையாருக்கு சிதறு தேங்காயாக உடைப்பதன் தத்துவம் என்ன?

அகங்காரம் என்ற மண்டை உடைந்தால் ஞானம் என்ற இளநீர் வெளிப்படும் என்பதேயாகும். எங்களது துன்பங்கள் சிதற வேண்டும் என்பதற்காகவும். பிள்ளையாரின் நிவேதனத்தைப் பல குழந்தைகளை உண்டு களிக்க வேண்டும் என்பதற்காகவும் தேங்காயைச்சிதற அடிக்கிறார்கள்.

வல்வினை போக்கி பக்தியையும் முத்தியையும் தருகின்ற எல்லாம்வல்ல விநாயகப் பெருமானை ஆவணிச் சதுர்த்தியில் உள்ளன்போடு முறைப்படி வழிபட்டு அன்பையும், அருளையும், இஷ்டசித்திகளையும்பெற்றுக்கொள்வோம்.

★

## கைதவறிவிட்டது

அச்சுவேலி தெற்கு மாவடி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தம்பிஐயா கெங்காதேவி ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை (இல. 565390970V), விசேட அடையாள அட்டை (இல. 0903019605) இரண்டும் 2001–08–12 ஞாயிறன்று "வல்லிபுரக் கோயில்" – ஆலய வீதியில் கை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் எனது சொந்த முகவரியிலோ அல்லது கீழ்க்காணும் முகவரியிலோ கொடுத்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

அம்பாள் தொலைத் தொடர்பகம்,
ஆவரங்கால், புத்தூர்.
T.P.070-212665.

(91420)



## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 29 - 11 - 1987

விண்ணில் 16 - 09 - 1996

### செல்வி திவ்வியா விஜேந்திரன்

திதி : 22-08-2001

பாடும் குயில் ஒன்று பாட மறந்ததுவோ?
ஆடும் மயில் ஒன்று அசையாது நின்றதுவோ?
வீடும் இருண்டதுவோ வித்தகி திவி
மண்ணகன்ற சேதி கேட்டு வானும் இருண்டதம்மா!

*பிரிவால் துயருறும்:*
க.பூபாலசிங்கம் குடும்பத்தினர்.

*தற்காலிக முகவரி:*
றக்கா லேன்,
சுண்டுக்குளி.

*நிரந்தர முகவரி:*
பாடசாலை வீதி, நாவற்குழி.

(91431)



## நன்றி உணர்வோடு வாழ்த்திப் பாராட்டுகின்றோம்

**மணற்காடு புனித அந்தோனியார் ஆலய** வளர்ச்சிக்காக
நிதி ஒதுக்கீடு செய்து உதவிய



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு
புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்
விவகார இந்து சமய கலாசார அமைச்சரும்
ஈழமக்கள் ஜனநாயகக்கட்சிச் செயலாளர்
நாயகமுமான மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



எமது ஆலயத்திற்காக முன்னின்று
உதவிசெய்தவரும், பருத்தித்துறை
பிரதேச சபைத் தலைவரும் வடமராட்சி
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
அமைப்பாளருமாகிய உயர்திரு.
**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**
(ரங்கன்)
அவர்களையும்

மனப்பூர்வமாக நன்றி உணர்வுடன்
வாழ்த்துகின்றோம்.

நிர்வாக சபை
உறுப்பினர்களும், ஆலய
பங்கு மக்களும்.

*மணற்காடு,*
*குடத்தனை.*

(C/17952)



உ

ஸ்ரீ முனீஸ்வரன் துணை

## நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

**யாழ்.கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானம்**

எமது ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்கு நிதி உதவி
வழங்கிய



*வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு*
*புனரமைப்பு, வடக்கு-கிழக்கு தமிழ்மொழி*
*விவகாரங்கள், இந்து சமய கலாசார*
*மாண்புமிகு அமைச்சர்*
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



*யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்*
**கௌரவ கே.வி.குகேந்திரன்** (ஜெகன்)
அவர்களுக்கும்



*நல்லூர் பிரதேச சபைத் தலைவர்*
**திரு.க.மணிபல்லவராஜன்**
(நிஷாந்தன்)
அவர்களுக்கும்

*யாழ்.மாநகரசபை உறுப்பினர்* **திரு.றீகன்** அவர்களுக்கும்

நிதி வழங்குவதற்கு உதவிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சகல உறுப்பினர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

*'செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்றல் அரிது'' - குறள் -*

யாழ்.கோட்டை முனீஸ்வரன்
தேவஸ்தானம்.

(91424)


## பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

வடமராட்சி,ஓக.22

பருத்தித்துறை பிரதேச சபையின் உறுப்பினராக ஈ.பி.டி.பி. அமைப்பிலிருந்து புதிதாக ஒருவர் நியமனம் பெற்றுள்ளார்.

இராஜரட்ணம் யோகராஜா என்பவரே புதிய உறுப்பினராக உதவித் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்டவராவார். (ம-173)

## அதிகாரி காங்கேசன்துறைக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,ஓக.22

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று புதன்கிழமை காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடிதங்கள் மற்றும் பொருள்களையும் அவர் எடுத்துச் சென்று கையளிப்பார். (ம-10)

## சிறுப்பிட்டி இளைஞனைக் காணவில்லை

யாழ்ப்பாணம்,ஓக.22

சிறுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்ற சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த வெள்ளையன் புஸ்பராசா (வயது 26) என்ற இந்த இளைஞர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## சனசமூக நிலையத்துக்கு மாடிக்கட்டடம்

வடமராட்சி,ஓக.22

தென்புலோலி அறிவகம் சனசமூக நிலையத்துக்கு புதிய மாடிக்கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய மாடிக்கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லை பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் அண்மையில் நட்டு வைத்தார். (ம-173)

## குழாய்க் கிணறு அமைப்பு

வடமராட்சி,ஓக.22

நெல்லியடி துரையன் தோட்டம் ஞானவைரவர் ஆலயத்தில் குழாய் கிணறு ஒன்று தோண்டப்படவுள்ளது.

குழாய்க் கிணறு தோண்டும் பணியின் ஆரம்ப வைபவம் ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்றபோது பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் அதனை ஆரம்பித்து வைத்தார்.

பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் குழாய்க் கிணறு அமைக்க 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-173)

## சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.22

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர் அவசரக் கலந்துரையாடல் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் பகுதிகளுக்கான சுகாதாரத் தொண்டர்களின் தலைவர், செயலாளர், பொருளாளர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-173)


## தவறிவிட்டது

நாவற்காடு வரணியைச் சேர்ந்த நடராசா இன்பருபன் என்பவரது விசேட அ. அ (இல. 091030812) வல்வை பிரதான சோதனைச்சாவடிக்கும் நெல்லியடி மகாத்மா வீதிக் குமிடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (19-08-2001) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (91417)



உ

## ஏழாலை மத்தி அருள்மிகு ஞானவைரவப் பெருமான்

**திருக்கோயில் பஞ்சகுண்ட பக்ஷ**
**மகா கும்பாபிஷேகப் பெருவிழா**

வைரவப் பெருமான் அடியார்களே!

மங்களகரமான விஷு வருஷம் ஆவணி மாதம் 6ஆம் நாள் இன்று (22.08.2001) புதன்கிழமை அத்த நட்சத்திரமும் சதுர்த்தித் திதியும் சித்தயோகமும் அமைவுறும் புண்ணிய தினத்தில் காலை 7.10 மணி முதல் 8.40 மணி வரையுள்ள கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நிகழ்வுறத் திருவருள் கைகூடியுள்ளது. ஆகவே அடியார்கள் வைரவப் பெருமானை மனதில் நினைந்து மகாகும்பாபிஷேகத்தை தரிசித்து உய்தி பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

*'பிரதிஷ்டா பிரதமகுரு'*
கிரியா கலாமணி
**பிரம்மஸ்ரீ சிதரம்பர கிருஷ்ணசாமிக் குருக்கள்** *(அச்செழு)*

*- ஆலய பரிபாலன சபை.*

(91432)



உ

## ஐயப்பன் தொலைத்தொடர்பு சேவை திறப்பு விழா அழைப்பு

மார்க்கண்டேய ஐயர் இல்லம்,
அரசடி வீதி, வட்டுக்கோட்டை.
*உள்நாடு T.P. 070 - 212468*
*வெளிநாடு T.P. 0094 - 70-212468*

இன்று (22.08.2001) புதன்கிழமை மதியம் மணி 11.54க்கு அத்த நட்சத்திரமும் சதுர்த்தித் திதியும் கூடிய சுபவேளையில்

வலிகாமம் பிரதேச சபைத் தலைவர்
**திரு.ந.திரிலோகநாதன்**

அவர்கள் இத்தத் தொலைத் தொடர்பு சேவையை மங்களகரமாக ஆரம்பித்து வைப்பார். அன்பர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

*உரிமையாளர்*
K.S.Son

இரவு, பகல் சேவை உண்டு.

(C/17951)



## உளம் கனிந்து நன்றிகூறிப் பாராட்டுகின்றோம்

**சக்கோட்டை, அல்வாய் புனித சவேரியார்**
கட்டட நிர்மாண புனரமைப்பு வேலைகளுக்கு ஆரம்ப
நிதி உதவி வழங்கியமைக்காக



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு
புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு
தமிழ் மொழி விவகாரங்கள் இந்து கலாசார
மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
(செயலாளர் நாயகம். ஈ.பி.டி.பி)
அவர்களுக்கும்



ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம
அமைப்பாளரும் நாடாளுமன்ற
உறுப்பினருமான கௌரவ
**கே.வி.குகேந்திரன்** (ஜெகன்)
அவர்களுக்கும்



இந்து கலாசார அமைச்சின் வடபிராந்திய
பொறுப்பாளராகிய
**திரு.ந.திரிலோகநாதன்**
அவர்களுக்கும்



பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி
அமைப்பாளருமாகிய உயர்திரு.
**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**
(ரங்கன்)
அவர்களுக்கும்

எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- மேய்ப்புப் பணிச்சபை,
ஆலய மக்கள்,
பங்குத்தந்தை.

*புனித சவேரியார் ஆலயம்,*
*சக்கோட்டை,*
*அல்வாய்.*

(91419)





## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில்
**திருமதி தேவன் இரத்தினதேவி**

அச்சக்கூட ஒழுங்கை அமரர் எம்.ஆர்.அவர்களின் மகளும், மண்டதின்னி திரு.சி.தேவராசாவின் அன்பு மனைவியுமான திருமதி தேவன் இரத்தினதேவி (இத்தாலி) யின் பிரிவால் வருந்தும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களும் அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளும்!

*சிவகுரு வீதி,*
*கொக்குவில் மேற்கு.*

பெரியம்மா, சின்னம்மாமார் குடும்பத்தினர்,
ஸ்ரீதயாளன், ஸ்ரீராகுலன்.

(C/17953)

# மிதிவெடியில் சிக்கியோரின் விவரம் குடாநாட்டில் சேகரிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.22

குடாநாட்டில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவங்களில் சிக்கி பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை பிரதேச செயலர் பிரிவுரீதியாக சேகரித்து ஆவணப்படுத்தும் முயற்சியில் யாழ்.செயலக மிதிவெடிச் செயற்பாட்டுப் பிரிவு ஈடுபட்டுள்ளது.

மிதிவெடிகளில் சிக்கி உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் விவரம் உட்பட மிதிவெடிகளில் சிக்கி தமது கால்நடைகளை இழந்தவர்களும் இது தொடர்பான விவரங்களை தத்தமது பிரதேச செயலகங்களில் -

இதற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளிடம் தெரியப்படுத்துமாறு மிதிவெடி செயற்பாட்டுப் பிரிவு அதிகாரி ஒருவர் கேட்டுக்கொண்டார்.

இந்த விவரங்களைச் சேகரிக்கும் முயற்சியின் முதற்கட்டப் பணி மிதிவெடிச் சம்பவங்கள் நிகழ்ந்த கிராமங்களில் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து குடாநாடு முழுவதும் மிதிவெடியால் பாதிக்கப்பட்டவர்களின விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் இந்த விவரங்களைச் சேகரிப்பதற்காக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக யாழ். பிரதேச செயலர் தெரிவித்தார். (க-6)

## ஒழுங்கையை பிரதேச சபை பொறுப்பேற்றது

அச்சுவேலி,ஓக.22

ஆவரங்கால் சந்தை வீதியில் இருந்து தெற்குப் பக்கமாக செல்லும ஒழுங்கையை வலி.கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

வீதியைப் பிரதேச சபை பொறுப்பேற்று திருத்த வேலை செய்ய வேண்டுமென அந்த வீதியைப் பயன்படுத்தும் பொது மக்கள் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் வீதியைப் பிரதேச சபை பொறுப்பெற்றுக்கொண்டதாக பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் அறிவித்துள்ளார்.

(ம-11)


# பாராட்டி நன்றி கூறுகின்றோம்

அல்வாய் மாலைசந்தை
ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்தின்
திருப்பணி வேலைகளுக்காக நிதியுதவி வழங்கிய



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்

நெல்லியடி ஈ.பி.டி.பியின் அமைப்பாளர்
**திரு . ப.இரவீந்திரன் (ராசிக்)**
அவர்களுக்கும்

ஈ.பி.டி.பியின் நெல்லியடி பிரதி அமைப்பாளர்
**திரு . அ.ஜெயசீலன்**
**(ஜெயம்)**
அவர்களுக்கும்

எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

(C/17904) - ஆலய பரிபாலன சபை.



உ

சாவகச்சேரி நகர் அருள்மிகு

## செருக்கல்பதி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

விநாயக மெய்யடியார்களே!

தென்மராட்சியின் புண்ணிய பூமியாக விளங்கும் சாவகச்சேரியின் நகர் மத்தியில் அமைந்து அடியவருக்கெல்லாம் அருள்பாலிக்கும் எம் சித்தி விநாயகரின் மகோற்சவ காலம் எதிர்வரும் 24-08-2001 வெள்ளிக்கிழமையில் இருந்து பத்துத் தினங்களாகும். இக்காலத்தில் விரதம் அனுஷ்டிக்கும் அடியார்கள் நாம் மீண்டும் எமது மண்ணில் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ எல்லாம் வல்ல எம் இறைவன் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திப்போமாக!

குறிப்பு:- எமது ஆலயச் சூழலில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக இம்முறையும் மகோற்சவம் நடைபெறமாட்டாது என்பதை உபயகாரர்களுக்கு அறியத்தருகின்றோம்.

சந்திரன் ஸ்ரோர்ஸ்
ஆ. குகநேசன்
517,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/17954)

இ.கருணாகரன
ஆலய தர்மகர்த்தா


# யாழ்.பிரதேச முன்பள்ளி ஆசிரியருக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.22

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுண்டுக்குளி சோமசுந்தரம் முன்பள்ளிக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-10)

## யாருடைய நகை?

யாழ்ப்பாணம்,ஓக.22

யாழ். போதனா வைத்தியசாலைக்கு 'எக்ஸ் - ரே' எடுக்கவந்த பெண் நோயாளி ஒருவரின் நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி கண்டெடுக்கப்பட்ட இந்த நகை ஆஸ்பத்திரிப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவறவிட்டவர் தகுந்த ஆதாரத்துடன், ஆஸ்பத்திரிக்குச் சமுகம் தந்து பெற்றுச்செல்லுமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(க-15)

## நூல் வெளியீடு

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தின் 'பசுந்தோகை' நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு விவசாயபீட பிரதான மண்டபத்தில் விவசாயபீட மாணவர் ஒன்றியத் தலைவர் மா.புவிராஜ் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக விவசாய பீடாதிபதி க.இராஜதுரை கலந்து கொள்வார். (ம)


## பாராட்டுகின்றோம்

தவறவிடப்பட்ட ஒரு தொகைப் பணத்தை மீட்டிட உதவிய திருநெல்வேலி **"கின் கல்வி நிலைய"**நல் மாணவன் ம. லஷ்சுதரன், ஆசிரியர் நவநீதன் மற்றும் நிர்வாகிகளையும் -

மனமாரப் பாராட்டுகின்றோம்.

சி.ரவீந்திரன்
குடும்பத்தினர்.

இராமநாதன் வீதி. (91435)



**லஷ்சுமி** இணுவில்.

இன்றுமுதல்
ரஜினி, கமலஹாசன்
நடிப்பில்
**அலாவுதீனும் அற்புதவிளக்கும்**
(ரீல்ஸ்)
தினசரி:- 10.30, 2.30
(பழையநேரம்)
(91439)



**நாகம்மாள்** சுன்னாகம்

வேணு, ரோஜா (இரட்டை வேடம்)
நடித்த
**பொட்டு அம்மன்**
(ரீல்ஸ்)
பேய்களின் அட்டகாசம் நிறைந்த படம்
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(91434)



**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று முதல் குதூகல ஆரம்பம்
சுப்பர் ஸ்ரார் விஜயசாந்தி
நடிப்பில்
**முதலமைச்சர் ஜெயந்தி**
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
(C/17875)


பண்ணாகம் மெய்கண்டான் ம.வியில்

# ஜீ.சீ.ஈ உயர்தர வகுப்பை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.22

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஜீ.சீ.ஈ உயர்தர வகுப்பு விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இந்தப் பாடசாலையில் இந்த வகுப்பை ஆரம்பிக்கவேண்டிய அவசியம் குறித்து தாம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்ததாகவும் -

அமைச்சரின் சிபார்சுடன் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் க.பரமேஸ்வரனுடன் கலந்துரையாடியதாகவும் -

அதற்கான அங்கீகாரத்தை விரைவில் வழங்க அவர் உறுதி அளித்துள்ளதாகவும் - வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் தெரிவித்தார்.

(க-3)

இன்று முதல் செப். 17 ஆம் திகதிவரையும்

# நகரங்கள் தோறும் ஜே.வி.பியின் அரச எதிர்ப்புக் கூட்டங்கள்

கொழும்பு,ஓக.22

"போலி சர்வஜன வாக்கெடுப்பு வேண்டாம்; நாட்டில் அராஜகத்தைத் தவிர்த்து நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டு" என்ற தொனிப்பொருளில் இன்று முதல் அடுத்த மாதம் 17 ஆம் திகதிவரை அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக தொடர் கூட்டங்களை மக்கள் விடுதலை முன்னணி நடத்தவிருக்கின்றது.

மாத்தளை பஸ் நிலையத்தில் இன்று முதலாவது பிரசாரக் கூட்டம் கட்சியின் செயலாளர் டில்வின் சில்வா தலைமையில் இடம்பெறவிருக்கின்றது.

தொடர்ந்து ஒவ்வொரு நகரங்களிலும் இடம்பெறவுள்ள எதிர்ப்புக் கூட்டங்களில் கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச உட்பட முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவிருக்கின்றனர்.

(க-3)

திருமறைக் கலாமன்றத்தின்

# கொழும்பு தமிழ் விழாவுக்கு 60 கலைஞர்கள் செல்கின்றனர்

யாழ்ப்பாணம்,ஓக.22

யாழ்.திருமறை கலாமன்றம் அதன கிளைச் சங்கங்களுடன் இணைந்து கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதிவரை 4 மேடைகளில் மாபெரும் தமிழ் விழாவை கொண்டாடவுள்ளது.

இந்தத் தமிழ் விழாவில் கலந்து கொள்வதற்காக குடாநாட்டின் 60 கலைஞர்கள் அடங்கிய மூன்று குழுகள் கொழும்பு செல்லவுள்ளன.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் முதல்நாள் நிகழ்வில் நவீன நாடகம், நடனம், இசைநாடகம், சிறுவர் நாடகம், இலக்கிய நாடகம், நாட்டுக்கூத்து ஆகிய கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றப் படவுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மூவின கலைஞர்களின் நடிப்பில் இரு தடவைகள் மேடையேற்றப்படவுள்ள "அசோகா" என்ற வார்த்தைகள் அற்ற நாடகத்தின் முதல் காட்சி மாலை 6 மணிக்கு மேடையேறவுள்ளது.

தமிழ் விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் எதிர்வரும் 16 ஆம் திகதி இரு மேடைகளில் நடைபெறும். காலை 10 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கருத்தரங்கும் 2 மணிக்கு கவியரங்கும் இடம் பெறும்.

மருதானை டவர் மண்டபத்தில் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் கலை நிகழ்ச்சிகளில் நடனம், நாடகம், கூத்து, பரதம் ஆகிய கலை நிகழ்வுகள் மேடையேற்றப்படவுள்ளதாக திருமறைக் கலாமன்ற பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(க-6)

## தென்மராட்சியில் பதிவு பெற்றுள்ள 7 முன்பள்ளிகள்

தென்மராட்சி,ஓக.22

தென்மராட்சி கல்வி வலயப் பகுதிக்குட்பட்ட ஏழு முன்பள்ளிகள் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் பதிவு இலக்கங்கள் குறிப்பிட்ட சான்றிதழ்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் வந்துள்ளதாகவும் இந்த முன்பள்ளிகளின் பொறுப்பாசிரியர் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

அந்த முன்பள்ளிகளின் விவரம் வருமாறு:-

சாவகச்சேரி கிழக்கு முன் பள்ளி மடத்தடி சங்கீதா முன்பள்ளி, சாவகச்சேரி இராசசங்கரி முன்பள்ளி, புலோப்பளை பிரதாபன் முன்பள்ளி-

மீசாலை வடக்கு பாரதி முன்பள்ளி, மிருசுவில் தவசிகுளம் முன்பள்ளி, சாவகச்சேரி கச்சாய் வீதி குழந்தை யேசு முன்பள்ளி. (க-117)


# மரண அறிவித்தல்

## திருமதி சோமசுந்தரம் சொர்ணம்மா

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தி காளி கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் சொர்ணம்மா நேற்று (21-08-2001) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் (பட்டுக்காரக் கந்தையா) அவர்களின் அன்பு மனைவியும், லயன். கெங்காதரன் (ஆசிரியர், சரவணபவானந்தா, வித்தியாலயம், கோப்பாய்), கௌரி, அம்பிகைபாகன், (யூரோவில் நிறுவனம், முத்திரைச்சந்தி), வைரவநாதன் (இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கொழும்பு), பிரகதீஸ்வரன் (ஜேர்மனி), திரிபுரசுந்தரி ஆகியோரின் அன்புத் தாயாரும், ருக்குமணி, காலஞ்சென்ற தெய்வேந்திரம், சுந்தரமதி, மீனலோஜினி, இந்துமதி (ஜேர்மனி), சிறீதரன் ஆகியோரின் மாமியாரும், மகேந்திரன் (லண்டன்), சிவாசினி, நுட்பாலினி, லகிதரன் (கனடா), கஜன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), கோகுலன், விதுசா, றுக்சா, கவித்தியா, சுரேந்திரகிருஷ்ணா அபிராம், துஸ்யந்தன், ரகுராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுந்தரம், பொன்னம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை), கணபதிப் பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), வெங்கடாசலம் (பிரதம எழுதுவினைஞர், பிரதேச செயலகம், கோப்பாய்), காலஞ்சென்றவர்களான கனகம்மா, ராசு, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-08-2001) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோப்பாய் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோயிலடி,*
*கோப்பாய் மத்தி.*
*கோப்பாய்.*

(91436)

தகவல்:
லயன் சோ.கெங்காதரன்
(மகன்)



ஓம்
விராட் விஸ்வ பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் ஆவணிமாதம் 8 ஆம் நாள் (24-08-2001) வெள்ளிக்கிழமை சித்திரை நட்சத்திரமும் ஷஷ்டி திதியும் கூடிய காலை 8.05 மணிமுதல் 9.35 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

திருமதி V.கணேஸ் தம்பதிகளின்
திருநிறை செல்வன்
**சந்திரமோகன் (மோகன்)**
(B.Com .Hons)



திரு.திருமதி K.சுரேந்திரன்
தம்பதிகளின்
திருநிறை செல்வி
**ஜனனி (ஜனா)**

ஆகிய இருவருக்கும் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி திருமணம் நல்லை சிவன் கோவிலில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி V.கணேஸ் குடும்பத்தினர்
5/2, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)
(தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை)

திரு.திருமதி K.சுரேந்திரன்
குடும்பத்தினர்
69, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(91440)

# சமுர்த்தி கட்டாய சேமிப்புத் திட்டத்தில் பல்வேறு முறைகேடுகள், ஒழுங்கீனங்கள்!

## ஜனாதிபதி அமைச்சர் திஸநாயக்கவுக்கு கடிதம்

கொழும்பு,ஓக.22

அரச நிதியில் இருந்து சமுர்த்தி பயன் பெறுவோருக்காக ஒதுக்கப்பட்ட கட்டாய சேமிப்பு தொடர்பான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில் பல முறைகேடுகளும் ஒழுங்கீனங்களும் இடம்பெற்றுள்ளன என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு அனுப்பி உள்ள கடிதம் ஒன்றிலேயே இப்படித் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி.

கட்டாய சேமிப்புக்காக பயனாளிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய வட்டி சரியான முறையில் வழங்கப்படவில்லை என்றும் -

சட்ட திட்டங்களை மீறி அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளைப் புறக்கணித்து சமுர்த்தி பண ஒதுக்கீட்டை முறைகேடான விதத்தில் பயன்படுத்தி உள்ளதாக தெளிவாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது என்றும் - ஜனாதிபதி அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட சேமிப்புப் பணத்தை அரச நிதி நிறுவனங்களில் மாத்திரம் முதலீடு செய்யுமாறு நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டது. ஆனால நீங்கள் தனியார் வங்கிகளில் அவற்றை முதலீடு செய்வதற்கு வேண்டுகோள் விடுத்தீர்கள். இந்த வேண்டுகோளை நான் எதிர்த்தேன். நிதி அமைச்சும் மத்திய வங்கியும் கூட எதிர்த்தன என்றும் ஜனாதிபதி அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நிதி மற்றும் திறைசேரி விதிகளை மீறி கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 'பான் ஏசியா' வங்கியிலிருந்து 16 கோடி ரூபா பெறுமதியான பங்குகளை தாங்கள் கொள்வனவு செய்துள்ளீர்கள். கடந்த 16 மாதங்களும் அந்த வங்கி இந்தப் பணத்துக்கு வட்டி எதையும் வழங்கவில்லை.

அதேநேரம் 26 கோடி ரூபா சமுர்த்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் சந்தேகம் எழுந்துள்ளது.

சமுர்த்தி நன்மை பெறுபவர்களின் சொந்தக் கணக்கில் 98 ஆம் ஆண்டு ஜூன் முதல் 99 ஆம் ஆண்டு ஒக்ரோபர் வரை வட்டி வைப்புச் செய்யப்படவில்லை. மீதி வட்டிக்கு என்ன நடந்தது என்று கேட்க விரும்புகின்றேன்.

சமுர்த்தி நன்மை பெறும் ஒவ்வொருவரும் முதலீடாக 7 ஆயிரத்து 500 ரூபாவை பெற்றிருக்க வேண்டும். வட்டி அதனுடன் சேர்க்கப்பட்டிருக்குமானால் தொகை மேலும் ஐயாயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்பட்டிருக்கும்.

சமுர்த்தி அமைச்சின் முறைகேடான நிதி முகாமைத்துவம் காரணமாக சமுர்த்தி நன்மை பெறுவோர் அந்த வட்டியை இழந்திருக்கிறார்கள். இதனால் கட்டாய சேமிப்பில் கீழ் நன்மை பெறக்கூடிய சுமார் 20 லட்சம் குடும்பங்கள் லட்சக்கணக்கான பணத்தை இழந்திருக்கின்றன.

இந்த முறைகேடுகள் அனைத்தையும் நிறுத்தி சமுர்த்தி நன்மை பெறுவோரின் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் - என்றுள்ளது.

(க-3-9)

### சிங்களவருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

வன்னியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் தாம் நடத்திய பேசசுக்கள் தொடர்பாக அங்கு அவர் விவரித்துக் கூறினார்.

"வறுமை காரணமாகவே சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேருகின்றனர். சிங்கள மக்களுக்கு எதிராக நாம் போராட்டம் நடத்தவில்லை சுயநலவாத தலைவர்களின் நிர்ப்பந்தத்தாலேயே தற்போதைய யுத்தம் நீடித்து வருகின்றது.

"தங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த முடியாத சிங்களத் தலைவர்கள், மாற்று மொழி பேசும் எம்முடன் எவ்வாறு புரிந்துணர்வுடன் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்க முடியும்" - இப்படி தமிழ்ச்செல்வன் தம்மிடம் கூறியதாக செய்தியாளர்களிடம் நாணயக்கார தெரிவித்தார். (க-9)

### கோட்டை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர ஊடக இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையான ஊடகவியலாளர்கள் பங்குபற்றினர்.

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், சம்பந்தப்பட்ட விமானப்படை அதிகாரி மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அங்கு கோஷங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர். (க-9)

### கைப்பற்றிய.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார்கள் - 3, பி.கே.எல்.எம்.ஜி. - 2, ஆர்.பி.எல்.எம்.ஜி. - 3, பி.81 எல்.எம்.ஜி. - 1, 40 மி.மீ.பிஸ்ரல் - 2, ஜி3ஏ3 - 1, ரி56ஓ2 ரகத் துப்பாக்கி - 6, ரி56ஓ1 ரகத் துப்பாக்கி - 20 உட்பட ஏராளமான ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றியுள்ளதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் மீட்ட நான்கு பொலீஸாரின் சடலங்களும் ஆயுதங்களும் கொக்கட்டிச்சோலைப் பகுதியில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

அதேவேளை - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இரு விமான்ங்கள் விமானத் தாக்குதல்களை மேற்கொண்டன என்றும் - சேதங்கள் குறித்து தகவல் கிடைக்கவில்லை என்றும் -

செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (க-3-9-21)

### சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குச் செல்வதாகக் கூறப்பட்டது.

இதேவேளை -

எல்லைப்புறப் பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொருட்டு பெரும் எண்ணிக்கையான படையினர் அங்கு குவிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-3-9)

### அம்பாறை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போதுமுதல் நான்கு மாதகாலம் தமது ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தைப் புலிகள் நீடித்து வந்தனர். அதற்குப் பின்னர் சமாதானப் பேச்சுக்கான சுமுகமான நிலையை ஏற்படுத்துவதற்காகத் தாங்கள் பெரும் தாக்குதல்களை தவிர்த்து வந்ததாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்த காலத்திலும் அதற்குப் பின்னான இதுவரை காலத்திலும் பெரிய தாக்குதலகளைப் புலிகள் நடத்தவில்லை. தற்காப்புத் தாக்குதல்களை ஆங்காங்கே அவர்கள் நடத்தியதோடு சரி.

எனினும் புறநடையாக கடந்த மாத இறுதியில் கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது விடுதலைப் புலிகள் பெரும் கரும்புலித் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தனர்.

இது கூட, வடக்கு - கிழக்கில் தமது நிலைகள் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலைக் கண்டித்து, விபரீத விளைவுகள் ஏற்படும் என்று எச்சரித்த பின்னர், அதற்குப் பதிலடியாக புலிகள் நடத்திய தாக்குதல் என்று கருதப்பட்டது.

அந்த வகையில் அதைத் தவிர்த்துப் பார்த்தால், கடந்த ஆண்டு டிசெம்பரில் பண்டிகைக் காலத்தில் தாம் அறிவித்த ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்துக்குப் பின்னர் புலிகள் தேடிப் போய் நடத்திய பெரும் தாக்குதல் நேற்று முன்தினம் இரவு அம்பாறை மத்திய முகாம் பொலீஸ் நிலையம் மீதானதுதான் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (உ)

DAY PAPER
2002 ஜீட்டில் வி-4.00, ஞாயி-4.00
பிரத்தியேகம் கைலாசபிள்ளையார் அருகில்
ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு
நாக.தமிழிந்திரன்
2001-08-23 முதல் எங்கும் தமிழ்
புதிது 2002 புதிது 2003
(91385)

சுடர் ஒளி 26-08-2001 இதழில்
அரசின் யுத்த முனைப்பும் இரசாயன ஆயுதங்களும்..
அடுத்தடுத்து அழிவுகள் அட்டமத்தில் சனியனா?
புலிகளின் வீர காவியம் மடுவில் வீடியோ காட்சி!
யுத்தம் பற்றி ஜனாதிபதியின் புத்தம்புது ஞான மொழிகள்...
நேரடி மோதலுக்கு எதிரணியினர் தயார்!
மத்திய அரசுடன் மோதுவதற்கு ஜெயலலிதா தயாராகிறார்...!
அமிலமும் உணவும் நெஞ்சுக் குழாய் களத்தில் இறங்கி இனப்பிரச்சினை
குடாநாட்டில் இளம் சந்ததியை எட்டப்பர் கூட்டமாக்க எதிர் முயற்சி
ஆயுதங்களை வாங்குவது வைத்திருந்து அழகு பார்க்கவா?
மற்றும் சுவையான அம்சங்கள்
வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் ஒரே ஒரு பத்திரிகை!
(91795)

# ஆர்ப்பாட்டத்தைக் குழப்பும் முயற்சியே பிரதமரின் அழைப்பு!

கொழும்பு,ஓக.22

அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி நாளை நடத்தவிருக்கும் பெரும் ஆர்ப்பாட்டத்தைக் குழப்பும் நோக்குடனேயே பிரதமர் எதிர்க்கட்சி தலைவரை நல்லிணக்க அரசு அமைப்பது பற்றி ஆராய அழைத்துள்ளார் என்றும் கொழும்பு செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவின் அழைப்பைக் குறித்து ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமான பதில் எதையும் உடன் வெளியிடமாட்டார் என்றும் -

நாடாளுமன்றத்தை மீண்டும் அரசு கூட்டாதவரை பேச்சுக்கான வாய்ப்பு குறைவாகவே இருக்கும் என்றும் - ஐ.தே. கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறியதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (க-3-9)

## இன்று விசாரணை

கொழும்பு,ஓக.22

யாழ். பல்கலைக்கழக மாணவன் கி. திவ்வியன் கைது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனித உரிமை மீறல் மனு இன்று பிரதம நீதியரசர் சரத் என். சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட விருக்கின்றது. (க-3)

## அம்பாறையில் பொலீஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலை நடத்திய அதேசமயத்தில் அருகில் இருந்த படையினரின் முகாம் மீதும் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் பொலீஸ் நிலையத்துக்கும் படைமுகாமுக்கும் இடையிலான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாக இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

அந்தச் சமயத்தில் பொலீஸ் நிலையத்தில் இராணுவப் பயிற்சி பெற்ற பொலீஸார், ஊர்காவலர்கள் என நூற்றுக்கு மேற்பட்டவர்கள் அங்கு கடமையில் இருந்துள்ளனர்.

ஆண் - பெண் போராளிகள் ஒரே சமயத்தில் பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தி அதனை சுமார் 15 நிமிட நேரத்தில் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் அந்தப் பொலீஸ் நிலைய முகாமில இருந்த ஆயுதங்களைக் கைப்பற்றி எடுத்துச் சென்றுள்ளனர்.

முகாமின் ஆயுதக் கிடங்கைப் புலிகள் சேதமாக்கவில்லை என்று தெரிவித்த இராணுவத் தரப்பு, சொற்ப தொகை ஆயுதங்களை மட்டுமே புலிகள் எடுத்துச் சென்றதாகத் தெரிவித்தது.

இதேவேளை -

பொலீஸ் நிலையத்தைக் கைப்பற்றிய புலிகள் அதிகாலை 4.30 மணி வரை அங்கு தங்கிநின்று அங்கிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றி எடுத்துச் சென்றதாக சுயாதீனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்த நான்கு பொலீஸாரின் சடலங்களைத் தாம் கைப்பற்றியுள்ளதாக விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் படையினரிடம் ஒப்படைக்கப் புலிகள் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை இந்தத் தாக்குதல் காலை ஏழு மணிவரை நீடித்ததாகவும் -

விடுதலைப் புலிகள் தாம் வந்த 6 டிராக்டர்களில் ஆயுதங்களை எடுத்துச் சென்றனர் என்றும் - சிங்கள செய்தி ஊடகங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க விடுதலைப் புலிகள் தமது நோக்கம் நிறைவேறாமலேயே அதிகாலை 2.30 மணியளவில் பின்வாங்கிச் சென்றுவிட்டதாகவும் - கூறப்பட்டது.

இந்தத் தாக்குதலில் புலிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது என்றும் - இராணுவத் தரப்பு தெரிவித்தது. (க-3-9-21)

காங்கேசன் சிமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியன்
அங்கத்தவர்கள் சகலரது கவனத்துக்கும்
விசேட பொதுக்கூட்டம்
நாள் :-24.08.2001 வெள்ளிக்கிழமை
நேரம் :-காலை 10.00 மணி
இடம் :-யாழ்.மில்க்வைற் தொழிற்சாலை வேலைக்களப் பகுதி
இக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் ஆராயப்பட உள்ளதால் சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும்.
ப.பாலகிருஷ்ணர், தலைவர்.
ந.சண்முகராஜா, க.கனகநாயகம், இணைச் செயலாளர்கள்.
(91392)

அவசர கலந்துரையாடல்
யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்களின பரீட்சை தொடர்பான முக்கிய கலந்துரையாடல்.
இடம் :- Students Complex
காலம் :- நாளை (23.08.2001) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெற இருப்பதால் அனைத்து 3ஆம் வருட கலைப்பீட மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
(91437)
- பிரதிநிதி,3ஆம் வருடம்.

கண்ணீர்க் காணிக்கை
காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் தொடர்ந்து 35 வருடங்களாகக் கடமைபுரிந்து ஓய்வுபெற்ற பெருமதிப்புக்குரிய பௌதிகவியல் ஆசிரியர்
திரு.சி.மு.சுப்பிரமணியம் (மணியம் மாஸ்ரர்)
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி அன்னம்மா முத்துக்குமாரு
அவர்கள் 21-08-2001 அதிகாலை சிவபதமடைந்ததையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
சிவகாமசுந்தரியும் சகோதரர்களும், குரு வீதி, காங்கேசன்துறை.
(91415)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.